விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியரிங்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
[பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.]
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4239)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 19 திங்கட்கிழமை (05.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

## கூட்டமைப்பில் மேலும் சிலர் மகிந்தவுடன் இணைவர்!

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷடன் இணைந்து கொள்ளவிருப்பதாக மகிந்தவின் சகோதரரான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நாடாளுமன்றில் வாக்களிக்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்த நிலையில் கோத்தபாய ராஜபக்ஷ இந்த தகவலை தெரிவித்திருப்பதுடன் கூட்டமைப்பு பிளவுபட்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

அநுராதபுரத்தில் நிகழ்வு ஒன்றில் நேற்று கலந்து கொண்ட அவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லையென அறிவித்துள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ அது தெரிந்தது தானே என்றும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கப் போவதில்லை யென கூறியிருக்கின்றது. 04☛

### வடக்கில் உள்ள பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்றைய தினம் விடுமுறை வழங்குமாறு வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வடமாகாண மக்கள் அனைவரும் தீபாவளித் தின 24☛

### அமைச்சு பதவி ஏற்புகள் நேற்றும் தொடர்ந்தது

(கொழும்பு)

இரண்டு புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் பிரதியமைச்சர் ஒருவரும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று பதவியேற்றனர்.

இதில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக, தேசிய ஒருங்கி 24☛

## எழுத்துமூல வாக்குறுதியை மகிந்தவிடம் கேட்டோம்!

### அவர் தரவில்லை என்கிறார் சம்பந்தன்



(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு திட்டத்தை முன்வைக்க வேண்டும். எவ்விதம் எந்த கால வரம்புக்குள் செயல்படுத்துவீர்கள் என்பதை எழுத்து மூலமாகத் தந்தால் ஆதரவு தருவது குறித்து பரிசீலிப்போம் என மகிந்தவிடம் கூறினேன். 23☛

## நவம்பர் 14-ம் திகதியே நாடாளுமன்றம் கூடும்

### ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் வரும் 14-ம் திகதியே கூட்டப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 14-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவில் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்றிரவு வெளியிடப்பட்டது.

பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி 23☛

### ஐ.தே.கட்சியின் 7வது விக்கெட்டும் வீழ்ந்தது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழாவது நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த தரப்புக்கு கட்சி தாவினார்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.டி.அசோக பிரியந்தவே இவ்வாறு நேற்று கட்சி தாவினார். அவருக்கு பிரதி அமைச்சுப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கி 23☛

## நாடாளுமன்றை கூட்ட தவறினால் மாற்றுவழி ஐ.தே.கவிடம் உள்ளது

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றை இந்த வாரம் கூட்டுவதற்கு ஜனாதிபதி தவறினால், அதனைக் கையாள்வதற்கு வேறு திட்டம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ளதாக அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் குழப்ப நிலை உருவான பின்னர் அமெரிக்காவும் ஜப்பானும் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியுதவியை இடைநிறுத்தியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

றொய்ட்டர் செய்திச்சேவைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

என்னை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியதன் காரணமாக இலங்கையில் ஜனநாயகத்தின் 23☛

## மைத்திரியின் அரசியல் அழிவு ஆரம்பமாம்!

### ஒருமையில் விழித்து சுமந்திரன் ஆவேசம்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கூறுபோட நினைக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் இறுதிக்காலம் ஆரம்பமாகி விட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இதனைக் 23☛

## எதிர்கால தலைமைத்துவம் பயங்கரமாக அமையும்!

### தேசிய சமாதான பேரவை எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இம்முறை இடம்பெற்ற அதிகார மாற்றம் மிகவும் மோசமானதென்றும் இதனை இப்போதே தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர்கால தலைமைத்துவம் மிகவும் மோசமாக அமையும் என்றும் தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா எச்சரித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தை விமர்சித்தும், ஜனநாயகத்தை காக்குமாறு கோரியும் கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. 23☛

## கூட்டமைப்பு நடுநிலைமை வகித்தால் பதவி விலகுவேன்

### வியாழேந்திரன் சவால்!

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலைமை வகித்தால் நானும் நடுநிலைமை வகிக்கத்தயார் என கிழக்குப் பிராந்திய அபிவிருத்திப் பிரதியமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடு 23☛

### கொழும்பில் இன்று அரசுக்கு ஆதரவாக பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணைந்த புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று நண்பகல் 12.00 மணிக்கு பாராளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவுள்ள சகல கட்சி 23☛

# தேவை

பாவித்த, பழுதடையாத
பீலி தகரம் தேவை (6350)

**077 873 0129**


# துப்பாக்கிச் சூட்டில் மகிந்த கட்சி உறுப்பினர் பலி

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து ஹக்மன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹக்மன - பெலிஅத்த வீதியின் கெபிலியபொல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஹக்மன பிரதேசசபை உறுப்பினர் எல்.எச்.சாந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வான் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் இவ்வாறு துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளதாகவும், குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் ஹக்மன பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு)

# யாழ்.இந்துவின் பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசுத தினம் திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஆளணியினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (மு)


## அமெரிக்க அதிஸ்ட விசா- முந்துங்கள் நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

அமெரிக்கா செல்வதன் மூலம் விசா இன்றி கனடா உட்பட பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்யலாம்.

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் 55000 இலவச விசாக்கள்

0768226243

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 80 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

என் வாழ்க்கைப்பயணத்தின் முதல் வெற்றி அமெரிக்க லொத்தர் விசா மூலம் ஆரம்பமாகின்றது. இதனை சாத்தியப்படுத்திய V2 TRAVELSக்கு எனது மனமார்ந்த நன்றிகள் .

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

உடனே விரையுங்கள்




கலைச்செல்வன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை

**V2 TRAVELS**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.வே.செல்வகுமார் (JP.WI)**

(B.A (Hons), PGDE, M.A, M.Ed, சைவப்புலவர்)

அதிபர், கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த அதிபருக்கான குருபிரதீபா பிரபா விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை அதிபரான திரு.வே.செல்வகுமார் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற இறை ஆசியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(C-4315) **கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் சிரேஷ்ட விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி சு.சுரேந்திரநாதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சண்முகம் அன்னம்மா**



மண்ணில்: 12.07.1939
விண்ணில்: 03.11.2018

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு நாமும் அத்துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை. (C-4318)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியில் நடன ஆசிரியராக கடமையாற்றும் திருமதி த.தனேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்



**அமரர் கனகசபாபதி பூரணம்**

அவர்கள் 17.10.2018 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
(6346) **யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்த கல்லூரி**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியில் பிரதி அதிபராக கடமையாற்றும் க.துஸ்யந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார்




**அமரர் கந்தையா கணேசகுலசிங்கம்**

அவர்கள் 27.10.2018 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
(6346) **யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்த கல்லூரி**

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 08 - 1925



மறைவு 03 - 11 - 2018

## சுப்பிரமணியம் சிறீ பத்மநாதன்

(ஓய்வுநிலை சிரேஷ்ட வரி மதிப்பாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

சாவகச்சேரி கோவில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீ பத்மநாதன் நேற்றுமுன்தினம் 03.11.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - லலிதாதேவி (அன்னக்கா) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சரோஜினி தேவியின் அன்புக் கணவரும் சரோஜினி, சுசிலாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான மீனாம்பிகை, சிவகுருநாதன், விமலாதேவி ஆகியோரின் சகோதரனும் இந்திராணி, லலிதாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம், அழகரட்ணம், யோகேந்திரன், பத்மாதேவி ஆகியோரின் மைத்துனரும் பிரதீபா, இராஜீவன் (Commercial Bankஇன் ஓய்வுநிலை வட பிராந்திய முகாமையாளர்) Dr.நிரூஜா, யாதவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீபாலன், கமலவாணி, Dr.ரவிந்திரராஜ், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாங்கன் (Scotland Yard U.K) சத்தியா, பிரகதீசன், கவிதாஞ்சலி, Dr.பிரகலாதன், கொயுத்திரிக்கா, Dr.செல்வாங்கன், அனிஷ், பிரசாந்தி, அபினயா, ஆரன்யா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2018) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் 435, கோவில் வீதி, நல்லூரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6351)

077 768 7821 தகவல்:- S.P.இராஜீவன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி

வட மாகாண துடுப்பாட்ட சங்கத்தின் செயலாளர் S.P. ராஜீவன் அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.சு.சிறி பத்மநாதன்**



கடந்த 03.11.2018 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**- வட மாகாண துடுப்பாட்ட சங்கம்** (C-4316)

# "மகிந்தவின் கொடுங்கோல் ஆட்சி எமக்கு வேண்டாம்"

# ஜனாதிபதியே ஜனநாயகத்தை காப்பாற்றுங்கள்

# மட்டக்களப்பில் நேற்று ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

## வியாழேந்திரனுக்கு எதிராகவும் கோஷம்




(ஏறாவூர்)

**"ஜனாதிபதியே ஜனநாயகத்தை காப்பாற்றுங்கள்" என்ற பிரதான கோரிக்கையுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**


நாட்டில் மக்களின் ஜனநாயக கோரிக்கையை புறந்தள்ளி ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டிக்கும் வகையில் இங்கு கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், சிறுபான்மை சமூகம் ஐக்கிய தேசிய கட்சியின் கோரிக்கையை கருத்தில் கொண்டே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவுசெய்த நிலையில் அந்த கோரிக்கையை புறந்தள்ளி ஜனாதிபதி இன்று செயற்படுவதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர்கள், மாநகர, பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், மைத்திரியே சீனிக்கும் டீசலுக்கும் வாக்களிக்கவில்லை, தீர்வுத் திட்டமே தேவை, மகிந்தவின் கொடுங்கோல் ஆட்சி எமக்கு வேண்டாம், 30 கோடிக்கு விலைபோன வியாழேந்திரன் இனியும் வேண்டாம், பாராளுமன்றத்தை உடன் கூட்டு சர்வாதிகாரத்தினை நிறுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையில் ஏந்தியிருந்தனர். (இ-7)

## தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய பாராளுமன்றில் மேற்சபை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக பாராளுமன்றத்தில் ஒரு மேற்சபை அமைக்கப்பட வேண்டும் என்று மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிதியின் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக பாராளுமன்றத்தில் ஒரு மேற்சபை அமைக்கப்பட வேண்டும். இதில் 50 சதவீதமானவர்கள் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

இது குறித்து விரைவில் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

வட மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிதியின் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து மாவட்ட அரச அதிபர்களுடன் பேசியிருப்பதாக அவர் கூறினார். இதன்படி, நவம்பர் மாத இறுதிப் பகுதிக்குள் ஐயாயிரம் வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்தோடு நட்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளவர்களில் ஆயிரம் பேருக்கு விரைவில் நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலுள்ள தரப்புக்களுடன் சுமுகமாக பேசி இதற்கான தீர்வை எட்ட முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினையை கையாள்வதற்காக விசேட அதிகார சபையொன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கோரி கொழும்பிலும் ஆர்ப்பாட்டப் பேரணி

### மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் பங்கேற்பு






(கொழும்பு)

ஜனநாயகத்தை பாதுகாக்க கோரி கொழும்பில் எதிர்ப்பு பேரணியும் ஆர்ப்பாட்டமும் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையின் பல மாவட்டங்களை சேர்ந்த சிவில் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மக்கள் என பலரும் ஒன்றிணைந்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டின் அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற சம்பிரதாயம் கவனத்தில் கொள்ளப்படாது சட்ட விரோதமான முறையில் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நாட்டின் பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டமையும் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தமையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (இ-7)

## மின் உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக தற்போதைய நிலையில் மின் உற்பத்தி நூற்றுக்கு 60 முதல் 65 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த அமைச்சின் ஊடக பேச்சாளர் சுலக்ஷண ஜெயவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 6 நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 90 சதவீதத்தை விட அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பேருந்துக் கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

பேருந்து கட்டணத்தை நூற்றுக்கு இரண்டு வீதமாக குறைப்பது தொடர்பாக எடுத்த தீர்மானம் தொடர்பில் நாளை மறுதினம் 7ஆம் திகதி தேசிய போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று அனைத்து இலங்கை பேருந்து நிறுவனங்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் அஞ்ஜன பிரியன்ஜித், சாதாரண மற்றும் ஆடம்பர சேவைகளுக்கு இந்த கட்டணத்தை குறைக்க தொழிற்சங்கத்தின் நிறைவேற்றுக் குழு முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

இதற்கிடையில் பேருந்துக் கட்டணத்தை குறைப்பதற்காக நேற்றைய கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்க லங்கா தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன, நூற்றுக்கு இரண்டு வீதமாக பேருந்து கட்டணத்தைக் குறைப்பதில் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரணிலுக்கு ஆதரவு இல்லை

### ஜே.வி.பி. உறுதி



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசிய கட்சிக்கோ, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரவு வழங்காது என அதன் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# குல்தீப் சுழல் ஜாலம்; கார்த்திக் கலக்கல் துடுப்பாட்டம்

## முதல் ரி20 போட்டியில் இந்தியா அசத்தல் வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரானமுதலாவது 'ரி20' போட்டியில் குல்தீப் யாதவின் 'சுழல்' ஜாலம், தினேஷ் கார்த்திக்கின் கலக்கல் பேட்டிங் கைகொடுக்க இந்திய அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள மே.தீவுகள் அணி (அதி காரப்பூர்வ மாக விண்டீஸ்), மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நேற்று கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்தது.

**குர்னால் அறிமுகம்**

இந்திய அணியில் குர்னால் பாண்ட்யா, கலீல் அகமட் அறிமுகமாகினர். இவர்களுக்கு, அணித் தலைவர் ரோகித் சர்மா 'ரி20' போட்டிக்கான பிரத்தியேக தொப்பி வழங் கினார்.

உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் புவனேஷ்வர் குமார் விளையாடவில்லை. இவரு க்கு பதிலாக உமேஷ் யாதவ் இடம் பிடித்தார். மே.தீவுகள் அணியில் ஓஷேன் தாமஸ், பேபியன் ஆலன், காரி பியர்ரே அறிமுகமாகினர். நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**குல்தீப் அபாரம்**

மே.தீவுகள் அணிக்கு தினேஷ் ராம்தின் (2), ஷோய் ஹோப்(14) ஏமாற்றினர். ஷிம்ரான் ஹெட்மயர் (10), அனுபவ பொலார்ட் (14) நிலைக்க வில்லை. குல்தீப் 'சுழலில்' டரன் பிராவோ (5), ராவ்மன் பவெல் (4), அணத் தலைவர் கார்லஸ் பிராத்வைட் ( 4 ) சிக்கினர். பேபியன் அலன் (27) ஆ று த ல கொடுத்தார்.

மே.தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் டுக்களை இழந்து 109 ஓட்டங்கள் எடுத்தது. கீமோ போல் (15), பியர்ரே (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குல்தீப் 3 விக் கெட்டுக்களை கைப்பற்றினார்.

**ரோகித் ஏமாற்றம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஓஷேன் தோமஸ், கார்லஸ் பிராத்வைட் தொல்லை கொடுத்தனர். தோமஸ் 'வேகத்தில்' அணித் தலைவர் ரோகித் சர்மா (6), ஷிகர் தவான் (3) வெளியேறினர். பிராத்வைட் பந்தில் ராகுல் (16), ரிஷாப் பன்ட் (1) அவுட்டாகினர். இந்திய அணி 45 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

**கார்த்திக் அபாரம்**

பின் இணைந்த தினேஷ் கார்த்திக், மணிஷ் பாண்டே ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. தோமஸ் பந்தில் ஒரு சிக்சர் அடித்த தினேஷ் கார்த்திக், பொலார்ட் வீசிய 12ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள் விரட்டினார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 38 ஓட்டங் கள் சேர்த்தபோது மணிஷ் பாண்டே (19) அவுட்டானார். பேபியன் அலன், பியர்ரே பந்தில் தலா ஒரு பவுண்டரி குர்னால் பாண்ட்யா, கீமோ பால் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 17.5 ஓவர்களில் 5 விக்கெட் டுக்களை இழந்து 110 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தினேஷ் கார்த்திக் (31), குர்னால் பாண்ட்யா (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை பெற்றது.

**ரோகித் 10**

இந்தியாவின் ரோகித் சர்மா, இதுவரை 10 போட்டிகளுக்கு அணித் தலைவராகச் செயற்பட்டு 9 வெற்றி, ஒரு தோல்வியை பெற்றுத் தந்துள்ளார். இதன்மூலம் சர்வதேச 'ரி20' அரங்கில் கேப்டனாக களமிறங்கிய முதல் 10 போட்டியில் அதிக வெற்றி தேடிக் கொடுத்த தலைவர் என்ற பெருமை பெற்றார்.

இதற்கு முன் பாகிஸ்தானின் சொயப் மலிக், சர்பராஸ் அகமட், அவுஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க், ஆப்கானிஸ்தானின் ஆஸ்கர் ஆப்கன் ஆகியோர் தலைவர்களாகச் செயற்பட்ட முதல் 10 போட்டியில் 8ல் வெற்றி தேடிக் கொடுத் திருக்கின்றனர்.





# ஸ்ரெய்ன் வேகம்

## தென்னாபிரிக்கா அமோகம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் ஏமாற்றிய அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத் தில் தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலியா சென்று ள்ள தென்னாபிரிக்க அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி பெர்த்தில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ஸ்ரெய்ன் தொல்லை**

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஸ்ரெய்ன் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' டிராவிஸ் ஹெட் (1), ஷார்ட் (0) வெளியேறினர். நிகிடி பந்தில் அணித் தலைவர் ஆரோன் பின்ச் (5)ஆட்டமிழந்தார். பெலுக்வாயோ பந்தில் கிறிஸ் லின் (15), மக்ஸ் வெல் (11), மார்கஸ் ஸ்டாய்னிஸ் (14) சரணடைந்தனர். பட் கம்மி ன்ஸ் (12) 'ரன்-அவுட்' ஆனார். பொறுப்பாக ஆடிய அலெக்ஸ் கேரி (33), நாதன் குல்டர்நைல் (34) ஆறுதல் தந்தனர். மிட்சல் ஸ்டார்க் (12) நிலைக்கவில்லை.

அவுஸ்திரேலிய அணி 38.1 ஓவர்களில் 152 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந் தது. ஹேசல்வுட் (6) ஆட்டமிழக்கா மல் இருந்தார். தென் ஆப்ரிக்கா சார்பில் பெலுக்வாயோ 3, ஸ்ரெ ய்ன், நிகிடி, இம்ரான் தாகிர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னர்.

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு குயின் ரன் டி கொக் (47), ஹென்டிரிக்ஸ் (44) நல்ல துவக்கம் தந்தனர். மார்க்ரம் (36) ஓரளவு கைகொடுத் தார். கிளாசன் (2) ஏமாற்றினார். தென்னாபிரிக்க அணி 29.2 ஓவர் களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து 6 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

அணித் தலைவர் டு பிளசி (10), டேவிட் மில்லர் (2) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பில் ஸ்டாய்னிஸ் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இரு அணிகளுக்கும் இடை யிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 9ல் அடிலெய்ட் ஓவலில் நடைபெறுகிறது.

**ரசல் விலகல்**

இந்தியாவுக்கு எதிரான 'ரி20' தொடரில் இருந்து மே.தீவுகளின் சகலதுறை வீரர் அன்ட்ரோ ரசல் காயம் காரணமாக விலகி னார். ஆப்கானிஸ்தான் பிரிமியர் லீக் (ஏ.பி.எல்.) தொட ரில் பங் கேற்ற இவரது முழங்காலில் காயம் ஏற்பட்டிருப்பதாக கூறப் படுகிறது.

அசாருக்குகௌரவம்நேற்றைய போட்டியை, இந்திய அணியின் முன்னாள் அணத் தலைவர் அசார், ஈடன் கார்டன் மைதா னத்தில் உள்ள மணியை அடித்து ஆரம்பித்து வைத்தார்.

143

விக்கெட் காப்பில் அசத்திய இந்தி யாவின் தினேஷ் கார்த்திக் 3 'பிடி எடுப்பை மேற்கொண்டார்' செய்தார். இதன்மூலம் இவர், ஒட்டு மொத்த 'ரி20' அரங்கில் அதிக பிடி எடுத்த செய்த விக்கெட் காப்பாளர் பட்டியலில் இலங்கை யின் சங்கக்காரவை (142 'பிடி', 264 போட்டி) முந்தி 2வது இடம் பிடித்தார். இது வரை இவர், "252 போட்டியில் 143 'பிடி' எடுத்துள்ளார். முதலிடத் தில் இந்தியாவின் தோனி (151 'பிடி' , 297 போட்டி) உள்ளார்.

# கூட்டமை...

ரி.என்.ஏ. என்பது எப்போதும் எங்களுக்கு எதிராக இருந்தவர் கள் தானோ, ஆனால் இன்று ரி. என்.ஏ. பல துண்டுகளாக பிளவ டைந்திருக்கின்றது.

ரி.என்.ஏ. இல் இருக்கும் நாட்டை நேசிக்கும் தமிழ் மக்களை நேசிக் கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதற் கமைய ரி.என்.ஏ.இல் இருக்கும் ஒரு பகுதியினர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இணைந்து கொள்ள விருக் கின்றனர்.

புதிய பிரதமராக பதவியேற்ற மகிந்த ராஜகபக்ஷ நாடாளுமன்றில் தனக்கு தேவையான பெரும் பான்மைபலத்தைநிருபிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஏனையகட்சிகளின்நாடாளுமன்ற உறுப்பினர்களை கோடிக்கணக் கான பணத்தை கொடுத்து விலை க்கு வாங்கி வருவதாக தொடர்ச்சி யாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டு வருகின்றன.

குற்றச்சாட்டை மகிந்த ராஜபக்ச வின் சகோதரர் கோத்தபாய ராஜ பக்ச முற்றாக நிராகரிக்கின்றார்.

அதில் எந்தவித உண்மையும் இல்லை. ஆனால்அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் 400 மில் லியன் டொலர் நிதியை ஸ்ரீலங்கா வில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த செலவிட்டதாக அண்மையில் தெரி வித்துள்ளார். இதற்கமையவே 2015 மகிந்த ராஜபக்ஷவை ஆட்சி யிலிருந்து அகற்றுவதற்கு முன்னர் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்கப்பூருக்கு அழைக்கப்பட்டு பெரும் தொகை பணத்துடன் மீளத் திரும்பியிருந்தனர். இவ் வாறு விலைகொடுத்து வாங்கிய காலமொன்று முன்னர் இருந்தது. ஆனால் அப்படி பெரும் தொகை பணத்தைகொடுத்துநாடாளுமன்ற உறுப்பினர்களை வாங்குவதற்கு பணம் கொடுப்பதற்கும் எங் களு க்கு ஒரு நாடும் இல்லை. அவ்வாறு எங்களுடன் இணையவும் ஒரு நாடும் முன்வரவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

### "சூழ்ச்சி செய்து பின்கதவால் பிரதமர்"

# கொலைகார ஆட்சி எமக்கு வேண்டாம்

## முன்னாள் அமைச்சர்கள் கண்டியில் ஆர்ப்பாட்டம்



(கண்டி)

முன்னாள் அமைச்சர்கள் பலர் நேற்றுக் கண்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, காமினி ஜெயவிக்ரம பெரேரா, சம்பிக்க ரணவக்க, தயா கமகே, லகீ ஜெயவர்தன, ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் முதலில் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்குச் சென்று மாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்று கொண்டதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சூழ்ச்சிகார அரசு எம க்கு வேண்டாம், பின்கதவு பிரதமர் எமக்கு வேண்டாம், கொலைகார ஆட்சி எமக்கு வேண்டாம் பொய்யன் எமக்கு வேண்டாம் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷம் எழுப்பினர். (இ-7)

## கொலைக் குற்றச்சாட்டில் ஏழு பேர் இதுவரை கைது

(கொழும்பு)

ஹங்வெல்ல, எம்புல் கமுவ பகுதியிலுள்ள விருந்தக விடுதி உரிமையாளர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் 7 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி குறித்த விருந்தக விடுதி உரிமையாளர் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 21 முதல் 36 வயதுடையவர்கள் எனவும் அவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)


## மணமகள் தேவை


யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உடைய 1988.10.21 இல் சதயநட்சத்திரம், கும்பராசியில் பிறந்த கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்) உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மண்மகன் கொழும்பில் உள்ளார்)

தொடர்பு:- 077 978 0205

(கந்தை) (6329)


### மகிந்தவுடன் எந்தப்பிரச்சினையும் இல்லை

# புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு அத்துரலிய தேரர் அறிவிப்பு



தற்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையை கருத்திற்கொண்டு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர் தெரி வித்தார். புதிய பிரதமருடன் தமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது எனவும் தேரர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன், நன்கு சிந்தித்தே புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)


## 18 ஆம் ஆண்டின் நினைவில்

வாழ்வுக்காக

1960
01
08



ஓய்வுக்காக

2000
10
25

அமரர் கந்தப்பு தவராசா (பவா)

திதி:05.11.2018

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம்-நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்தடிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தே விடுங்கள் எம்மிடம்!

(C-4313)

கரவெட்டி மத்தி, கரவெட்டி.

நினைவுத் துயரில் மனைவி, பிள்ளைகள்.


## இராசி பலன்

**மேடம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், வழிபாட்டால் சந்தோசம் காணவேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**இடபம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, அருமையான நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், நிதி நிலை உயரும் நாள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், பேச்சில் இனிமை பிறக்கும், ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், கூட்டணிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** தொழிலை விருத்திசெய்யும் எண்ணம் உருவாகும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**இராசி பலன் – கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு, புத | சூரி, சுக் | சந் |

சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்தரட்டாதி

05.11.2018

ஐப்பசி 19, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 11.55 மணிவரை

அத்தம் முன்னிரவு 9.13 மணிவரை

சுபநேரம் 12.04-1.34 மணிவரை

இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்



வட வரணி சி.சபாவின் பகலில் காணும் கனவுகள் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். (படங்கள்:-விஜயவாசன்)

## கந்தசஷ்டி விழாக்கால சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திரு வண்ணைநகர் ஸ்ரீகதிரேசன் கோவில் என வழங்கும் ஸ்ரீ வள்ளி தேவசேனாசமேத செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த ஸ்கந்த சஷ்டி திருவிழாக்கால விசேட சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 4.30 மணியளவில் இடம்பெறும் என சொற்பொழிவு ஒழுங்கமைப்பாளர் சமயஜோதி க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார்.

முதலாம் நாள் சொற்பொழிவு சைவப்புலவர் கந்தசத்தியதாசன் விடயம் "தன் வினை தன்னைச் சுடும் "

இரண்டாம் நாள் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "கந்தபுராணம் உணர்த்தும் மும்மலங்கள்" மூன்றாம் நாள் சொற்பொழிவு சைவப்புலவர் கா.கமலநாதன் விடயம் "நிலைமாறும் தேவரை நிலை நிறுத்தும் கந்தன்" நாலாம் நாள் சொற்பொழிவு சைவப்புலவர் ச.மு்குந்தன் விடயம் "திருப்பெரும் வடிவம்" ஐந்தாம் நாள் சொற்பொழிவு சைவப்புலவர் செ.த.குமரன் விடயம் "ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி " ஆறாம் நாள் சொற்பொழிவு சைவப்புலவர் பொன்.சந்திரவேல் விடயம் "நீதியால் உலகு அளிப்பதே அரசர்தம் நெறி" ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)




## கரணவாய் தாமோதர வித்தியாலய நிறுவுநர் நினைவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலய நிறுவுநர் நினைவுப் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமைபிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலைஅதிபர் ஆ.விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன், கௌரவ விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் கே.கேதீஸ்வரநாதன், பரிசில் வழங்குநராக யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியை திருமதி. இராஜராஜேஸ்வரி சத்திய சீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-9)

## பட்டப்பின் கல்வியியல் தகைமை கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வியியல் தகைமை கற்கை நெறிக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 12.11.2018 அன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமாகும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## சரசாலை பொதுநூலகத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சி

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சரசாலை பொது நூலகத்தில் முன்பள்ளி சிறுவர்களுக்கு என "வாசிப்பால் உயர்வடைவோம்" எனும்தலைப்பில் இனங்களுக்கு இடையில் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு வாசிப்பு என்ற ரொனிபுலப்படும் வகையில் நாடகம் தாளலயம் எனும் போட்டிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. அத்துடன் பத்திரிகை வெட்டுத்துணுக்குகள் புதிய நூல்கள் போன்றனவும் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் வாசிப்பு ஏன் அவசியம் என்ற விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப அலுவலக பொறுப்பதிகாரி ரமணன் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

இந் நிகழ்வில் முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். (இ-103)

## சைவ வித்தியா விருத்திச்சங்க தீபாவளித் திருநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளித்திருநாள் நிகழ்வு நாளை 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சைவவித்தியா விருத்திச்சங்க ஆராதனை மண்டபத்தில் சங்கத் தலைவர் வி.ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணிதவியற்றுறைப் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் எஸ்.டி.பி. வங்கி முகாமையாளர் எஸ். சபேஷ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ



தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு விநியோகம் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் உரிய பயனாளிகளிடம் நேரடியாகவழங்கப்பட்டன.



வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா செலவில் கதிரைகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்து வழங்கி வைத்தார். (89)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் வைபவம் கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ்,சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிரதீபன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியை திருமதி சுகுணதேவி சின்னையா,கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து பரிசளிப்பு மற்றும் மதிப்பளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்:-சுபேசன்)

# அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்த மைத்திரி இரட்டை வேடம் போடுகின்றார்

## மங்கள சமரவீர காட்டம்

(கொழும்பு)

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது இரட்டைவேடமிடுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதியமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.





முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் இந்த புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்த போதே மங்கள மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 2015 ஆம் ஆண்டு அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த நடவடிக்கை மற்றொரு அதிரடியான சந்தர்ப்பவாதம் மற்றும் அரசியல் இரட்டைவேடமான செயற்பாடாகும். அது நடந்தால், இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வரும் ஒரே சாதகமான நடவடிக்கை இது தான்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அவை முதல்வராக தினேஷ் குணவர்த்தன

### ஐ.தே.க. நிராகரிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற அவை முதல்வராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையில், இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே சபை முதல்வராக தினேஷ்குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்ட கட்சியின் சார்பிலேயே அவை முதல்வர் தெரிவு செய்யப்படுவார் என்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்காமல், அவை முதல்வரை நியமிப்பது செல்லுபடியாகாது என்றும், ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாராளுமன்றத்தை விரைவில் கூட்டுவேன்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தை விரைவில் கூட்டுவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சண்டேரைம்ஸிற்கு தெரிவித்துள்ளார். எங்களுக்கு அவசியமான பெரும்பான்மையுள்ளது. பாராளுமன்றம் விரைவில் கூடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் அமைதியானதாக காணப்படும். நாங்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைகளை மேலும் வலுப்படுத்துவோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் தொடர்பான வாக்குறுதிகள் உட்பட எங்களது சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவோம் என சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதியளித்துள்ளோம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சுப் பதவியைப் பெற்ற எட்டு பேர் ரணிலுக்கு ஆதரவு!

### மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகள் பெற்றுள்ள 8 பேர் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொள்வார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில்வாக்கு அளிக்கப்படும் நேரத்தில் அது வெளிப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாகவே சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் தினத்தில் அவர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் இருப்பார்கள் எனவும் மத்தும பண்டார மேலும் தெரிவித்தார்.

சிங்கள வானொலிச் சேவைக்கு தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சுப் பதவியை காட்டி என்னை அழைக்கின்றனர்

### பியதாஸ எம்.பி.தெரிவிப்பு

(ஹற்றன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் காரணமாக புதிய பிரதமாராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டவுடன் புதிய அரசாங்கத்தோடு வந்து இணைந்து கொண்டால் அமைச்சுப் பதவி தருவதாக எனக்கு அழைப்பு விடுக்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.பியதாஸ தெரிவித்தார்.

ஹற்றன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

இந்த ஆர்ப்பாட்டதில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நாட்டில் இன்று திடீர் என பிரதமரை மாற்றி புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்த நாட்டின் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஆனால் மகிந்த அணியினர் பாராளுமன்றில் பெறும்பான்மையை நிரூபித்து காட்டுவதற்காக என்னையும் அழைத்து கூறினார்கள் உங்களுக்கு அமைச்சு பதவி தருகிறேன் பெருந் தொகையான நிதி தருகி ன்றேன். மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குமாறும் எனக்கு அழைப்பு விடுத்தனர்.

இந் நிலையில் பாராளுமன்றத்திலே அநேகமான உறுப்பினர்கள் எங்களின் பக்கமே இருக்கின்றனர். ஆகையால் பாராளுமன்றம் கூடிய பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மையை காட்டுவார் என அவர்மேலும்தெரிவித்தார். (இ-7)

## ஏழு கிலோ தங்கத்துடன் மீனவர்கள் மூவர் கைது!



(கொழும்பு)

ஏழு கிலோ தங்கத்துடன் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பன்தீவு மற்றும் கிம்புல் பொக்க கடற்பகுதிக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக கடத்திச் செல்ல முற்பட்ட 7 கிலோ தங்கம் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

40, 42 மற்றும் 45 வயதுடைய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். தங்கம் கடத்த முற்பட்ட டிங்கி படகும் கடற்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


## சேவை நலன் பாராட்டு

### திருமதி. தவமணிதேவி சுப்பிரமணியம்



எமது பாடசாலையில்
கடந்த 2003.01.01 ஆம்
திகதி தொடக்கம் 2008.12.31
ஆம் திகதி வரை சேவையாற்றி
இடமாற்றம் பெற்றுச்
சென்று மீண்டும் 2015.09.09
ஆம் திகதி தொடக்கம்
பாடசாலையில் இணைந்து
சேவையாற்றி 2018.11.03
ஆம் திகதி ஓய்வுபெற்று
இன்று பாடசாலையின் பரிசில் தினத்தின் போது
கௌரவம் பெறும் எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. தவமணிதேவி சுப்பிரமணியம்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

(6337)

பாடசாலை சமூகம், யா/ தோப்பு அருள்நந்தி வித்தியாலயம், அச்சுவேலி.

# கனகபுரம் மாவீரர்துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி






(கண்டாவளை)
கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதற்கான முன்னேற்பாடாக நேற்றுமுன் தினம் சிரமதானப் பணிகள் முன் னெடுக்கப்பட்டன.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவு பணிகள் பணிக்குழுவின் ஏற்பாட் டில் பொது மக்கள், மாவீரர்களின் பெற்றோர், உறவினர் மற்றும் உரித்துடையோரால் இப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய பிரதேச சபைகளின் உறுப்பினர் கள், மாவீரர்களின் பெற்றோர்கள் ஒன்றிணைந்து இச் சிரமதான பணிகளை முன்னெடுத்துள்ள னர். (2-315)





கிளி/ சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையில் கடந்த 2ஆம் திகதி பரிசில் வழங்கும் நிகழ்வும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ஜே.பரமோதயன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## பாராளுமன்றத்தை கூட்டுக!

# ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு



(கிளிநொச்சி)
பாராளுமன்றத்தை கூட்டுமாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவா ளர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கண்ணன் கோவில் முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்ட பேரணி கிளி நொச்சி மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு கவனயீர்ப்பு முன் னெடுக்கப்பட்டது. (2)

# கந்தசஷ்டி விரதம்

(வவுனியா)
வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவி லில் கந்தசஷ்டி விரதத் திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்ப மாகின்றது.

தினமும் காலை 8.30 மணி முதல் எம் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் வச ந்த மண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி வீதி உலா நடைபெறும்.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் சுவாமி உள் வீதி, வெளிவீதி உலா இடம்பெ றும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி முதல் சூரன் போர் இடம்பெறும்.

ஆறு நாட்களும் கந்தபுராணம் படித்து பொருள் விரிவுரை நடை பெறும். (2)

# ஹெரோயினுடன் சிக்கிய இளைஞனுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)
பேலியகொட சந்தியில் நேற்று காலை ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேலியகொட தொரண சந் தியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவ ரிடமிருந்து 5 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற் றப்பட்டதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபரை அளுத்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது நீதவான் அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (2-7)

# பாலத்திற்கு அருகில் பெண்ணின் தலை மீட்பு

(கொழும்பு)
இனந்தெரியாத பெண் ஒரு வரின் தலை ஒன்று பொல்கொட பாலத்திற்கு அருகில் இருந்து மீட் கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தக வலின் அடிப்படையில் நேற்று காலை இந்த தலை மீட்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்த பெண் தொடர்பான அடையாளம் இது வரையில் இனங்காணப்பட வில்லை என பொலிஸார் தெரி விக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பண் டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-7)

# அரசிதழ் அறிவிப்புக்காக தயார் நிலையில் அச்சகம்

(கொழும்பு)
அவசர அரசிதழ் அறிவித்தல் களை வெளியிடுவதற்காக அரசாங்க அச்சகப் பணியகம் தயார் நிலையில் இருப் பதாக, அதன் தலைமை அதிகாரியான கங்க லியனகே தெரிவித்துள் ளார்.

எந்த நேரத்திலும், முக்கிய மான அரசிதழ் அறிவிப்புக்களை வெளியிட வேண்டியிருக்கும் என் றும், அரசாங்க அச்சகப் பணியா ளர்களைத் தயாராக வைத்தி ருக்கும் படியும், ஜனாதிபதி செயல கமும், சபாநாயகர் செயலகமும், தமக்கு தகவல் அனுப்பியதாக அவர் தெரிவித்தார்.

எனினும், நேற்று முன்தினம் மாலை வரை, எந்த அரசிதழ் அறிவிப்பும் அரசாங்க அச்சக திணைக்களத்துக்குக் கிடைக்க வில்லை.

இம் மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தைக் கூட்டுவ தற்கு, அரசிதழ் மூலம் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போதைப்பொருட்களின் பாவனை இளையோர் மத்தியில் அதிகரிப்பு

## -பூநகரியில் செயலமர்வு-

(பூநகரி)
போதைப் பொருட்களின் பாவனை இளையோர் மத்தியில் அதிகரித்து வரும் நிலையில் கடற்கரைப் பிரதேசமான நாச்சிக் குடாப்பிரிவு மக்கள், பொது அமைப் புக்கள் அடங்கிய ஒரு தொகுதியின ருக்கான செயலமர்வு பூநகரி பிர தேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.க.கிருஸ்ணேந்திரன் தலைமை யில் இடம்பெற்றது.

இதன் போது பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் இவ்விடயம் பற்றி தமது கவலையைத் தெரிவித் ததுடன் சில சம்பவங்களைச் சுட்டி உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத் தினர்.

இச் செயலமர்வில் பூநகரி பிரதேச உதவி செயலர், பிரதேச செயலக கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு பொலிஸ் பிரிவினர், சுகாதார சேவைப்பிரிவினர், கிராம சேவை அலுவலர்கள், பூநகரி பிரதேசசபை உறுப்பினர் என பலரும் கலந்து கொண்டதோடு சமுகமளித்த பலரும் பெரிய அளவில் தயாரிக்கப்பட்ட "போதை அற்ற நாட்டை உருவாக்க உறுதி பூணுவோம்" என்ற பதாகையில் கையொப்பமிட்டனர். (2-84)





யாழ். ஏழாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 2ஆம் திகதி சங்கத்தின் தலைவர் திருமதி மைதிலி சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். (படங்கள்:-கிஷோர்)

# யுத்தத்தினால் பாதிப்புக்களை சந்தித்த மக்களுக்கு காசோலைகள் வழங்கப்படவுள்ளன

## எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும்



(கண்டாவளை)

யுத்தம் மற்றும் வன்செயல்கள் காரணமாகப் பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்தித்த மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான பணிகளை துரிதப்படுத்துமாறு மீள்குடியேற்றம் புனரமைப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் விவகார அமைச்சின் கீழ் இருக்கும் புனரமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக வடக்கு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் 320 பேருக்கும் கிளிநொச்சியில் 300 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 170 பேருக்கும் முதல்தொகுதி கொடுப்பனவுகளுக்கான காசோலைகளை வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினரான 790 பேருக்கு காசோலைகளை வழங்கிவைக்கும் இந்த நிகழ்வுகள் 9ஆம் திகதி முல்லைத்தீவில் காலையில் மாவட்ட செயலகத்திலும் கிளிநொச்சியில் மதியம் கூட்டுறவு மண்டபத்திலும் யாழ்ப்பாணத்தில் மாலையில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் நிகழ்வைத் தொடர்ந்து அந்தந்த மாவட்டங்களில் கோரிக்கைகள் மற்றும் தேவைகளுடன் சந்திக்கவுள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இந்த இழப்பீட்டுத் தொகையானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமானதாக இல்லை என்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட திட்டங்களை ஏற்படுத்தி மேலும் இழப்பீடுக்களைப் பெற்றுக் கொடுக்கவும் எஞ்சியவர்களுக்கும் உரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-315)




# அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயத்தை மீளவும் கிளிநொச்சியில் அமைக்க வேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயத்தை மீளவும் கிளிநொச்சியில் அமைக்க வேண்டும்என மாவட்டத்தின் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளும் கரைச்சி, பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேசசபைகளையும்கொண்ட சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வரும் ஒரு மாவட்டமாக காணப்படுவதுடன், 34 இற்கும்மேற்பட்ட தபாலகங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூடப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயத்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என மாவட்டத்தின் அமைப்புக்கள் கோரியுள்ளன.

அதாவது, பரந்தன் தபாலகம்,பூநகரி தபாலகம்,பளை தபாலகம், கிளிநொச்சி தபாலகம் ஆகிய நான்கு பிரதான தபாலகங்களின் கீழ் சுமார் 34 இற்கும் மேற்பட்ட உப தபாலகங்கள் இயங்கி வருகின்றன.

இதனைவிட யுத்தம் காரணமாகசெயலிழந்தமுகமாலை மற்றும் ஆனையிறவு பகுதிகளுக்கான உப தபாலகங்கள் இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இதனை விட பாரதிபுரம். செல்வாநகர், மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளிலும் புதிய தபாலகங்களை நிறுவுவதற்கான கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் குறித்த விடயங்கள் பேசப்பட்டபோதும் இதுதொடர்பில் எந்த முன்னேற்றங்களும் இல்லை எனவும் மேற்படி பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(2-315)

# வீதிகள் புனரமைக்கப்படாமையால்

## ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தி தினமும் பாடசாலை செல்கின்றோம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி போன்ற இடங்களுக்கான போக்குவரத்து வசதி இன்மை. வீதிகள் புனரமைக்கப்படாமை போன்ற காரணங்களால் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு போக்குவரத்து வசதிகளின்றி சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் புத்துவெட்டுவான் மற்றும் ஐயன்கன் குளம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற வெளிமாவட்டத்தைச்சேர்ந்த ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்கியிருக்கக்கூடிய வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு ஏ-9 வீதி கொக்காவில் சந்தியை வந்தடைகின்றனர்.

அதன் பின்னர் அங்கிருந்து குறித்த பாடசாலைக்குச் செல்வதற்கு வாகன வசதிகள் இல்லாத நிலையில் தினமும் 600 ரூபாவிற்கு ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தி பாடசாலைக்குச்சென்று கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், பாடசாலை முடிந்து மீண்டும் 600 ரூபாவிற்கு ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தி கொக்காவில் சந்தியை வந்தடைந்து பேருந்துகளில் மீண்டும் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

இவ்வாறு வாரத்தில் ஐந்து நாட்களும் ஆசிரியர்கள் போக்குவரத்து துன்பங்களை அனுபவிப்பது மட்டுமல்லாது பெருந்தொகைப்பணத்தினையும் போக்குவரத்துக்காக செலவிடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. (2-315)

# வவுனியா மாவட்ட முதியோர் தினவிழா





(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வவுனியா மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து நடத்திய வவுனியா மாவட்ட முதியோர் தினவிழா அண்மையில் வவுனியாவில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ் .எஸ்.வாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய பேருந்து நிலையத்தில் காலை பேருந்துகளில் முதியோர்களின் பயண வசதிக்காக ஆசனம் ஒதுக்குகின்ற நிகழ்வு இடம்பெற்றிருந்ததோடு அதனை அடுத்து முதியோர் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற தொனிப்பொருளில் புதிய பேருந்து நிலையத்திலிருந்து நகர சபை கலாசார மண்டபம் வரை ஊர்வலம் ஒன்று இடம் பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஹனீபா கலந்துகொண்டதோடு மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஷ்குமார் , செட்டிகுளம் பிரதேச செயலாளர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர், கைதடி முதியோர் இல்லத்தின் பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஊர்வலத்திலும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# "வாசிப்பு நுட்ப முறைகள்" சொற்பொழிவும் "பூங்கதிர்" சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

வாசிப்பு மாதத்தையொட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பூநகரி நல்லூர் மகா வித்தியாலய மண்டபத்தில் "வாசிப்பு நுட்ப முறைகள்" எனும் விடயம் பற்றி பிரதேச சபை உப தவிசாளர் சி.ஸ்ரீரஞ்சனால் சொற்பொழிவு இடம்பெறுமென ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரமளவில் இடம்பெறவுள்ள இறுதி நாள் நிகழ்வில் பரிசளிப்பு விழாவும் "பூங்கதிர்" சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(2-84)

# ஆவாகுழு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக கைதான நபருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

ஆவா குழு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாக கைது செய்யப்பட்ட நபரை இன்று 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

ஆவா குழுவின் துண்டுப் பிரசுரங்களை அயலவர்களுக்கு விநியோகித்தார் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

ஆவா குழுவின் எச்சரிக்கை என அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கடந்த மாத முற்பகுதியில் வவுனியா நகரையண்டிய பல பகுதிகளிலும் விசிறப்பட்டிருந்தன.

இதனையடுத்து குறித்த பகுதிகளில் வவுனியா பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததுடன், இது தொடர்பான விசாரணைகளையும் பலரிடம் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் விசாரணை ஒன்றுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு பிரஸ்தாப நபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் அங்கு சென்ற போது பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவரை கைது செய்தனர்.

அத்துடன் ஆவா குழு என்ற பெயரில் வீசப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்கள் தொடர்பாக அவரின் இல்லத்திலும் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்திருந்து வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக அந்த நபரை இன்று 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (2-250)

# மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தமர்வு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 59 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் முள்ளியவளை, முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு நேற்று முன்தினம் ஊற்றங்களை ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட படை கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ராஜகுருவின் பணிப்பிற்கமைய 59 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் றுவான்வணிகசூரியவின் வழிகாட்டலில் முள்ளியவளை, முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இவ்வாண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதபாட வழிகாட்டல் கருத்தமர்வு நடைபெற்றுள்ளது.

இதன்போது, மாணவர்களுக்கான கணிதபாட மாதிரி வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டு, கருத்தமர்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்த கருத்தமர்வை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் எல்.சதீஸ்குமார், வவுனியா மகா வித்தியாலய ஆசிரியர் ஏ.சதுவன் ஆகியோர் நிகழ்த்தியுள்ளார்கள்.

இந்த வழிகாட்டல் கருத்தமர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் படையினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-281)

# இடம்பெயர்ந்த நிலையிலுள்ள ஐ.தே.கவினர் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தன்னை தானே வீட்டுக்காவலில் வைத்துக் கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சியினர் தற்போது இடம் பெயர்ந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் தன்னைத்தானே வீட்டுக்காவலில் வைத்துக்கொண்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவே உலகில் தன்னைத்தானே வீட்டுக்காவலில் வைத்துக் கொண்டமைக்கான முதல் உதாரணம்.

இவர்கள் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எந்தளவுக்கு நாட்டை சூறையாடியது என்பது தற்போது தெரிகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவியேற்று சிறிது நேரத்தில் எரிபொருள் விலையை குறைக்க முடிந்தது. பெருமளவில் வரிச் சுமையை குறைக்க முடிந்தது. சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் இரத்து செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார். (இ-7)

# புதையல் அகழ்வு எட்டுப்பேர் கைது



(மஹாஓயா)

மஹாஓய - நுவரகலதென்ன வனப்பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் உஹன மற்றும் மஹாஓய பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

இதன் போது , புதையல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22,23,26,45 மற்றும் 56 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்-ஆறுமுகன்



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நிதியமைச்சுடனான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகமான சௌமிய பவனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ்ும் கலந்து கொண்டார்.

அங்கு ஆறுமுகன் மேலும் தெரிவிக்கையில், தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸும் கலந்துகொண்டார்.


நிதியமைச்சுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையை அடுத்து தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அமைச்சரவை ஆவணம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்.

இதனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும் வரை எந்த ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தப்பட மாட்டாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரங்கே பண்டாரவின் தகவல் குறித்து விசாரணையைக் கோரும் நாமல்





(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வெளியிட்டுள்ள தகவல் தொடர்பில் விசாரணைகள் அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தன்னை கட்சி மாறுமாறு கோரி, 2.8 டொலர் மில்லியன் வழங்குவதாக அரசாங்க தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ். பி. திசாநாயக்க அலைபேசி மூலம் அழைப்பு விடுத்ததாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ள கருத்தானது மிகவும் பாரதூரமானதெனவும், இது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாதென்றும், பாலித ரங்கே பண்டாரவின் கருத்து உண்மையெனில், அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே நாமல் இந்த கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார். (இ-7)

# தொழிற்சங்கங்கள் ராஜிதவுக்கு ஆதரவு



(கொழும்பு)

எந்த அரசாங்கமாக இருந்தாலும் சுகாதார அமைச்சர் பதவியை ராஜித சேனாரட்னவே வகிக்க வேண்டும் என ராஜித சேனாரட்னவிற்கு ஆதரவாக செயற்படும் சில தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அரச தாதி அதிகாரிகள் சங்க தலைவர் சமன் ரத்னப்ரிய மற்றும் அரச குடும்ப சேவை அதிகாரிகள் சங்க தலைவர் தேவிகா கொடித்துவக்கு ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

ராஜித சேனாரட்னவை மீண்டும் சுகாதார அமைச்சராக நியமித்தால் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சுகாதார அமைச்சை சிறப்பாக வழிநடத்தியவர் ராஜித சேனராட்ன தொழிற்சங்கம் என்ற ரீதியில் ராஜித சேனாரட்ன சுகாதார அமைச்சராக பதவி வகிக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு என அரச தாதி அதிகாரிகள் சங்கம், அரச குடும்ப சேவை அதிகாரிகள் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஆயிரம் குளங்கள்-ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 67 குளங்கள் புனரமைப்பு

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் 67 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரம் குளங்கள் - ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இந்த குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் 3 குளங்களின் புனரமைப்புப் பணிகள் தற்போது பூர்த்தியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குளங்கள் மூலம் 3 ஆயிரத்து 200 ஏக்கர் வயல் காணிகளுக்கு நீரை விநியோகிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த குளங்களைப் புனரமைப்பதற்காக 26 கோடி 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆயிரம் குளங்கள் - ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் பல பகுதிகளிலும் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்னும் பத்துப் பேர் புதிய அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் -வாசு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இன்னும் பத்துப் பேர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வது தொடர்பிலும், பாராளுமன்றத்தைக் கூட்டும் போது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்துமே நேற்று முன்தினம் கூட்டத்தில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வியாழேந்திரனை மகிந்த அணிக்கு இழுக்க கனடாவில் பேரம்; ஆங்கில ஊடகம் தகவல்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், திடீரென மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதன் பின்னணியில் நடந்த பேரம் குறித்த சில தகவல்கள் ஆங்கில வார இதழ் ஒன்றில் வெளியாகியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் கடந்த வெள்ளிக்கிழமை, பிராந்திய அபிவிருத்தி ( கிழக்கு மாகாண) பிரதி அமைச்சராக பதவியேற்றிருந்தார்.

கனடாவில் இருந்து கொழும்புக்கு 24 மணித்தியாலம், விமானத்தில் ஒன்றாகப் பயணித்த தனது சகாவிடம் அந்த திட்டத்தை வெளிப்படுத்தாமல் இரகசியமாக வைத்திருந்தார்.

கனடாவில் உள்ள தமிழ்ச் சமூகத்தினால் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.துரைரட்ணசிங்கமும் எஸ்.வியாழேந்திரனும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வு முடிந்த பின்னர், இருவரும் ஒன்றாக விமானம் ஏறினர். பயணத்தில் அவர்களின் ஆசனங்களும் அருகருகே தான் இருந்தன.

அவர்கள் தரையிறங்கியதும், நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு துரைரட்ணசிங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. அவரது பங்கேற்பு முக்கியமானதாக இருந்தது.

வியாழேந்திரனுக்கு அந்த தகவலை வழங்குவதற்கு கூட்டமைப்பு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஏனென்றால் அவர் விமான நிலையத்தில் இருந்து, கட்டுநாயக்கவுக்கு அருகே உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிறிது ஓய்வெடுத்த பின்னர், புதிதாக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வியாழேந்திரன் கனடாவில் இருந்த போதே, இந்த பேரத்தை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடத்தி வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்குமாறு மகிந்தவிற்கு அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழு கூட்டத்தில் பங்கேற்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுவின் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் முன்னிலை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோருக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ரணில் காலத்திலும் அமைச்சுப் பதவிகேட்டு பல இடங்களுக்கு திரிந்தவர் வியாழேந்திரன்

## யோகேஸ்வரன் எம்.பி.காட்டம்



(ஏறாவூர்)


வியாழேந்திரன் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும், அவருக்கு அமைச்சுப் பதவி கேட்டு பல இடங்களில் திரிந்தவர் என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் பிரதியமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் யோகேஸ்வரனை வினவிய போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

வியாழேந்திரனின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பில்எமது கட்சியின்தலைமைப் பீடத்திற்கும் அறிவித்திருந்தோம், அதிலும் நாம் எச்சரிக்கையாகவும் இருந்தோம்.

ஆனால் அவர் திடீரென கனடா நாட்டிற்குச் சென்றுவிட்டார். பின்னர் அவர் மீண்டும் இலங்கை வந்ததும் விமான நிலையத்திலிருந்தே நேரடியாக அரசு பக்கம் சென்றுவிட்டார்.

இதுவரைகாலம், அவர் தமிழ் மக்களின் மீது கரிசனை கொண்டது போல், செயற்பட்டது. நடித்தது, அவருடைய போலியான முகமாகும். அவர் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.சந்திரகாந்தனின் கல்விப் பொறுப்பாளராக செயற்பட்டவர்.



தற்போது வாக்களித்த மக்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு என்னென்னவெல்லாம் பெற முடியுமோ அவற்றையெல்லாம் பெற்றுவிட்டு சுகபோக வாழ்க்கைக்காக போயிருக்கின்றார்.

மாவட்டத்தில் சில அரச அதிகாரிகள் இவ்வாறான அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்திருக்கின்றார்கள். ஏனெனில் அவர்களின் பதவி உயர்வு போன்றவற்றிக்கு உதவும் என நினைக்கின்றார்கள்.

வியாழேந்திரன் புளொட் கட்சி சார்ந்தவராக இருந்தலும், எங்களது தமிழரசுக் கட்சியில் தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அவருடைய புளொட் கட்சி இவரை கட்சியிலிருந்து நீக்கியிருப்பதாக தற்போது அறிவித்திருக்கின்றது.

அதற்கிணங்க எமது தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் எமது கட்சியிலிருந்து நீக்குவதாக தேர்தல் ஆணையாளருக்கு கடிதத்தை அனுப்பி வைப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடமைகளைப் பொறுப்பேற்றார்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளராக வே.சிவஞானசோதி கடந்த 30ஆம் திகதி நியமித்துள்ளார். சிவஞானசோதி வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளராகவும் உள்ளார்.

இதற்கு முன்னதாக சிவஞானசோதி சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவமத அலுவல்கள் அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் செயலாளராக கடமையாற்றியுள்ளார்.

இந்நிலையில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவ் அமைச்சின் பிரதியமைச்சராக காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

## அணிமாறி அமைச்சரான

# வசந்த சேனநாயக்க லண்டனுக்கு பயணம்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த - ஜனாதிபதி மைத்திரி அரசாங்கத்தில் கடந்த புதன்கிழமை அமைச்சு பதவியை பெற்றுக்கொண்ட வசந்த சேனநாயக்க அவசரமாக லண்டனுக்கு சென்றுள்ளார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்றுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. மேலும் குறித்த விஜயம் தனிப்பட்ட காரணங்களுக்கானது என செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினரான ரொஷான் ரணசிங்க மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோரும் வெளிநாட்டுக்கு சென்றுள்ளனர். இந்நிலையில் வசந்த சேனநாயக்கவும் அவசரமாக லண்டனுக்கு சென்றுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரணிலுக்கு கூட்டமைப்பு ஆதரவு

# தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை



(ஏறாவூர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பது மிகத் தெளிவானது என கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில்,

அரசியல் ஒரு சமூக விஞ்ஞானம், அதில் அறிவுபூர்வமான அணுகுமுறைகளும் பரிசோதனை முயற்சிகளும் தேவை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தது சரியா? பிழையா? என்ற அரசியலமைப்பு வியாக்கியானங்களுக்குள் செல்லாமல், சரி எது? பிழை எது? என்பதற்கு அப்பால், யார் சரி? யார் பிழை? என்பதற்கு அப்பால், இன்று எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையைத் தமிழர் தரப்பு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நான் முன்வைக்கவுள்ள ஆலோசனைகளுக்கான அடிப்படையாகும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் மிகத் தெளிவானது.

இன்று நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையில் சிங்களச் சமூகத்தின் மிகப் பெரும்பான்மையானவர்களும் முப்படைகளும் பொலிஸாரும் மகாசங்கத்தினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிதாக அவரால் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் பக்கமே நிற்கின்றனர் என்ற யதார்த்தத்தைத் தமிழர் தரப்பு அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உணர்வுபூர்வமான செயற்பாடுகளில் கடந்த அரசாங்கம் ஈடுபடவில்லை

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தேசிய வர்த்தகர்களை பொறுத்தவரை உணர்வுபூர்வமான செயற்பாடுகளில் கடந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தால் அது சரி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார். (இ-7)

# அடுத்த வருடம் 5சதவீத பொருளாதார வளர்ச்சி



(கொழும்பு)

அடுத்த வருடத்தில் 5 சதவீத துரித பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இலங்கை ரூபாவின் ஸ்திரத்தன்மையை பேண உரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டங்களை மத்திய வங்கி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த வருடத்தில் விவசாய துறையின் வளர்ச்சியையும் எதிர்பார்ப்பதாக நிதியமைச்சின் செயலாளர் மேலும்தெரிவித்துள்ளார்.(இ-7)

# நூலக தினமும் இந்து நாதம் சஞ்சிகை வெளியீடும் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் நூலக தினமும் இந்து நாதம்- 2 சஞ்சிகை வெளியீடும் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் நூலக பொறுப்பாசிரியர் கி.தவனேசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி சிவகலா பஞ்சாயுதம் கலந்து கொள்வார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை கல்லூரி அதிபர் தி.தேவதயாளன் வழங்குவார்.(இ-9)

# இளவாலை வருத்தப்படா
# 5 ஆவது ஆண்டுவிழா சி



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க இளைஞர் கழகம் வடமாகாணம் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் இடர்படும் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் மாதாந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், நோயாளர்களுக்கான மருத்துவ உதவிகள் மற்றும் ஏனைய உதவித்திட்டங்களாக துவிச்சக்கரவண்டி வழங்குதல், மருத்துவ முகாம்களை நடாத்துதல், வெள்ள அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல், இரத்ததான முகாம் நடாத்துதல், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. சாதாரணதர பரீட்சைகளில் தோற்றவுள்ள இளவாலை மற்றும் அயற்கிராம மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளை நடாத்துதல், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, விளையாட்டுத்துறைக்கான ஊக்குவிப்பு என பல்வேறு செயற்பாடுகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கது. இச் செயற்பாடுகளுக்கு புலம் பெயர் உறவுகள், கிராமத்தவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் நிறுவ னங்கள் கைகொடுத்து உதவி வருவதன்மூலமாக இப்பணியை ஆற்றி வருவதாக அறியப்படுகின்றது.

இவர்களது பணி மென்மேலும் தொடரவும், இவர்களது சமூக பணியின்மூலம் நலிவுற்ற மக்கள் விருத்திபெறவும், இவர்களைப் போன்று சமூகத்தில் இளைஞர்கள் தம்மாலான பணியினை மேற்கொள்ள இவர்களது பணி முன்மாதிரியாக அமையும் என நம்புகின்றேன். இவர்கள் பணி தொடர ஆதாரமாய் அணிதிரளும் அனை வரையும் பாராட்டி மலரும் சிறப்புமலர் சிறக்க என் நல்வாழ்த்துக் களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா. வேதநாயகன் அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



### அருளாசிச் செய்தி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது பொழுது போக்கு நோக்கமற்ற சிறந்த சமூக, கலாசார, கல்வி உதவிச் செயற் பாடுகளை மேற்கொண்டு வருகின்ற சிறந்த இளைஞர் சங்கமாக திகழ்கின்றது என்று கூறினால் மிகையா காது. எமது கிராமத்தில் மட்டு மல்லாது இச்சங்கத்தின் சேவையானது பல தேசங்கள் வரை பரந்து விரிந்து செல்கின்றது.

பொருளாதார நலிவான குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கான கல்விகற்றல் உபகர ணங்கள் வழங்குதல், கல்விச் செயற்றிட்டங்கள் செய்தல், மருத்துவ உதவிகள் வழங்கல், இரத்ததான முகாம், மருத்துவமுகாம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எனப் பல சேவைக ளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். இச் சங்கத்தின் சேவைகள் எண்ணிலடங்காதவை. இன்றைய காலகட்டத் தில் இவ்வாறான இளைஞர் சங்கங்களை காண்பது அரிது. இவ்வாறான சேவைகளை செய்து வரும் இச்சங்கத் தினை பாராட்டி வாழ்த்துவதுடன் இவ் வருத்தப்படாத வாலிபர் சங்கமானது மேலும் பல உச்சங்களை தொடவேண்டும். அவர்களது சேவை மேலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகப் பெருமானின் அருளாசி வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ. இராம.பாலச்சந்திரக்குருக்கள்.**



### நன்றியுடன் வாழ்த்துவோம்

ஒருவருடைய வாழ்க்கைப் பருவங்களில் வாலிபப் பருவம்தான் வலுவுடையது. சாதனைகளை நிலைநாட்டவல்லது. அதன் மூலம் தனது சமுதாயத்தை நல்வழிப்படுத்தி உயர்வு அடையச் செய்யும் ஆற்றல் மிக்கது. இக்கருத்தினை எங்கள் இளவாலை வருத்தப்ப டாத வாலிபர் சங்கத்தினர் கடந்த ஐந்து ஆண்டுகாலமாகச் சாதித்துக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் செயல் வியப்புக்கும் அதே நேரம் பாராட்டுக்கும் உரியதாகும்.

யாழ்ப்பாண மக்கள் வாழ்வில் ஆயுதப்போர் முடிந்த பின்னர் நம் அரசியல் எதிரிகள் மூலம் புதியதோர் அரசியல் சாணக்கியப் போர் நடந்து கொண்டு இருக்கிறது. மாணவர்களையும் வாலிபர்களையும் போதைப்பொருள், மது முதலியவற்றுக்கு அடிமையாக்கி அவர்களுடைய மதியை மயக்கி சுயத்தை, இழக்கச் செய்து கொள்ளை, வழிப்பறி, வாள்வெட்டு, பாலியல் வன்முறைகளுக்குத் தூண்டித் தமிழர் சமூகத்தைச் சீர்குலைக்கும் தீய செயற்பாடுகள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய சமூகத்தை நம்மவர்களைக் கொண்டே அடிக்கும் நயவஞ்சகச் செயல்கள் நடந்தேறுகின்றன.

இதன் உண்மை நிலையை அறிந்து தடுத்து நிறுத்த வேண்டிய நம் தலைவர்கள் பணப்போதைக்கு அடிமையாகிக் கண் மூடிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையை உணர்ந்த நம்வாலிபர்கள் சிலர் தாமாகவே சிந் தித்து நலிவுற்றிருக்கும் நம்மவர்களுக்குக் கைகொடு த்து அவர்களின் வருத்தத்தைப் போக்கி வாழவைக்கும் நற்பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன் தம்போன்ற தம்மில் இளைய வர்களையும் இந்த நல்வழியில் ஈடுபடச் செய்து கொண்டி ருக்கிறார்கள்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்னும் வள்ளுவர் குறளை மெய்ப்பித்துப் பணி செய்து கொண்டிருக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரை நன்றியுடன் பாராட்டுவோம். அவர்களின் தூயபணி தொடர வாழ்த்துவோம். அவர்கள் தளராமல் பணிசெய்யத் தோள் கொடுப்போம்.

"வளர்க பணி! வெல்க வாலிபம்"

**சு.செல்லத்துரை ஓய்வு நிலை அதிபர்.**



### வாலிபர்களை வாழ்த்துகின்றேன்

சமூகத்தில் பல்வேறு துறைகளிலும் ஆளுமை மிக்கவர்களை உருவாக்குவதற்கான கருவியாய் விளங்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது ஐந்து ஆண்டுகளை ஆக்கபூர்வமான முறையில் பூர்த்தி செய்து ஆறாவது ஆண்டில் கால் பதிக்கும் இத்தருணத்தில் அவர்களது பணி மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நெறிப்படுத்தல்கள் ஓர் அமைப்பினூடாக வழிநடாத்தப்படும்போது ஒழுக்கமும் அறிவும் கலாசாரமும் முறையாக முன்னேற்றமடையும். இளைஞர்களின் இத்தகைய இணைவு தற்காலத்தின் தேவையென்றே சொல்லலாம். ஓர் அரசாங்க அமைப்பாக அல்லாத போதும் சிறந்த முறையில் தொடர்ந்து ஐந்து வருடங்களாக பிரதேசத்தின் தேவை அறிந்து செயற்பட்டு வரும் ஓர் அமைப்பாக இந்த வருத்தப்படாத வாலிபர் சங்கம் செயற்பட்டு வருவது பாராட்டுதற்குரியது.

இணையத்திற்குள் முடங்கிக் கிடக்கும் உலகை தட்டி எழுப்புவது போல் மாவட்ட ரீதியாக இளைஞர்களை ஒன்றிணைக்கும் வகையில் வருடம்தோறும் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளும், தமிழர் பாரம்பரியத்தினை கட்டிக்காக்கும் வகையில் நடாத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, பட்டம் விடும் போட்டி என்பன உண்மையில் வரவேற்கத்தக்க விடயங்களாகும்.

அத்துடன் தங்களால் முன்னெடுக்கப்படும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், கணனிக் கற்கை நெறி மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களும் பரீட்சைகளும் போன்ற மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் தொடர்ந்து வரும் வருடங்களில் மேலும் பரந்துபட்ட அளவில் நடாத்தப்பட்டு பலரும் பயனுறும் வண்ணம் அமையவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். பல கடினங்கள் தாண்டி கருவுற்று செயல் கண்டு இன்று ஐந்தாண்டு கண்டு ஆறாண்டில் கால்பதிக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் தனது செயற்பாடுகளில் கரைகாண வாழ்த்துகிறேன்.

**அ.ஜெபநேசன் தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**



### மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அவர்களின் வாழ்த்துச் செய்தி

இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தினரின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளவாலைக் கிராமத்திலுள்ள இளைஞர்கள் தமது புலம்பெயர் உறவுகள் மற்றும் கிராமத்திலுள்ள உபகாரிகளிடமிருந்து நிதியினை பெற்று சமூகத்தில் தேவையுடையவர்களை அறிந்து அவர்களுக்கு உதவுவது சிறப்புடையது. அவர்களது பணி ஏனையவர்களையும் சமூகத்தில் அக்கறை கொள்ளச்செய்யும் என்பதில் தவறில்லை.

இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூகசேவை ஆற்றுவதனை நோக்காகக் கொண்டு அவர்களுக்கு உதவுவது பாராட்டப்பட வேண்டும். அதேபோல் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடாத்தியும் கற்றல் உபகரணங்களை வழங்கியும், இரத்ததான முகாம், டெங்கு ஒழிப்புப் பணிகள், பாரம்பரிய விழாக்கள், பண்டிகைகள் எனப் பல பணிகளை ஐந்தாண்டுகளாக ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இவர்களது பணியினை பாராட்டுவதோடு, இவர்களது பணிக்கு பக்கபலமாக இருந்து நிதி வழங்கும் நிறுவனங்கள் பரோபகாரர்களையும் பாராட்டி மலரும் சிறப்பிதழ், சிறப்புடன் இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்களை கூறி அகமகிழ்கின்றேன்.

**சு.முரளிதரன் மேலதிக அரசாங்க அதிபர் (காணி)**



### சேவைகள் தொடர வாழ்த்துகின்றேன்

இலங்கைத் திருநாட்டில் வடபுலத்தே யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் பதியான இளவாலைக் கிராமத்திற்கு பெருமைசேர்த்து வரலாற்றில் பெயர் பொறித்த இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்து நிறைவுடன் மகிழ்வாக ஆறாம் வருடத்தில் பால் பதிக்கும் இத் தருணத்தில் மன மகிழ் வுடன் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். தங்கள் வாலிபர் சங்கத் தால் எமது கல்லூரிக்கு ஆற்றப்பட்ட கல்விசார் சேவைகளையும் இளவாலைக் கிராமத்திற்கு வழங்கப்பட்ட சமூகநலன்சார் பங்களிப்பையும் விளையாட்டு, களியாட்ட, கலாசார நிகழ்வுகளையும் நினைத்து நன்றியுடன் பாராட்டுகின்றேன். இளமைத்துடிப்பும் வாலிபமிடுக்கும் தடம்மாறித் தடுமாறாமல் கிராமத்தின் அபிவிருத்திக்காக கழகத்தை இயங்கிச் செல்லும் நிர்வாக உறுப்பினர்களதும், அங்கத்தவர்களதும் தன்னலமற்ற சேவை வாழ்த்துவதற்குரியது என்பதில் ஐயமதுமில்லை. ஆலமர விழுதுகள் ஆலமரத்தினை பலமாக தாங்கி நிற்பது போல கழகத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் ஒற்றுமையாக கைகொடுக்கும் கழகத்தின் அனைத்து உறுப்பினர்களின் சேவைகள் இன்னும் தொடரவும், நீங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் சாதனையாளர்களாக திகழவும் வாழ்த்துகின்றேன்.

**Fr.E.Godfrey Joel (OMI)**
**J/ St. Henry's College,Ilavalai.**



### வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் சமூக சேவைகள் பாராட்டத்தக்கவை

தமிழ்த் தலைமைகளின் தவறான வழிகாட்டல்களால் தமிழ் இனம் பல இன்னல்களையும், துயரங்களையும்ஈடற்ற இழப்புக்களையும் சந்தித்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். கொடிய யுத்தமும், வன்முறைகளும் தமிழ் மக்களின் மனோ திடத்தையும், எதிர்காலம் மீதான நம்பிக்கையையும் பெரிதும் பாதிக்கச் செய்துள்ளது. இந்தநிலையில் "தமிழ் மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல" என்ற பலமான நம்பிக்கையை எமது மக்களிடையே நாம் கட்டியெழுப்ப வேண்டும். சரியான தலைமைத்துவத்தின் வழிகாட்டல் இல்லாமல் எமது இளைஞர், யுவதிகள் எதிர்காலம் மீதான நம்பிக்கையை இழந்தும், பொருத்தமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் இருக்கின்ற சூழலை நாம் மாற்றியமைத்து, அவர்கள் தலைநிமிர்ந்து வாழும் வாழ்க்கை உறுதி செய்ய வேண்டும்.

எமது இளைஞர்கள் போதைக்கும், வன்முறைக்கும் பழகி விட்டார்கள் என்று முன்னர் வடக்கு மாகாணசபையை பொறுப்பேற்றவர்கள் அவதூறு சுமத்திச் சென்றுள்ளார்கள். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது எமது இளைஞர், யுவதிகளுக்கு எந்த வகையிலும் உதவவில்லை. இத்தகைய இன்றைய யாழ்ப்பாணத்தின் சூழ்நிலையில் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தில் இளைஞர் முன்வந்து இணைந்து, சமூகப் பொறுப்போடு பல மக்கள் நலன்சார்ந்த பல காரியங்களைச் செய்துவருவது கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்கள்சமூகசேவைகள்மேலும்சிறப்பாக முன்னெடுக்கப்படவும் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களும், அவர்களால் வழிகாட்டப்படும் எமது இளைய தலைமுறையினரும் ஆளுமையுள்ள எதிர்காலத் தலைமைகளாக உருவாக வேண்டும் என்றும் விரும்புகின்றேன். உங்கள் முயற்சிகளுக்கு எனது ஆதரவும், வாழ்த்துக்களும் என்றென்றும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் மக்கள் சேவையிலுள்ள

**டக்ளஸ் தேவானந்தா பா.உ**

அமைச்சர்,மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)








நகைச்சுவைத்தனமாக, தென்னிந்திய சினிமாவின் பெயரைக் கொண்டு ஆரம்பித்து, பாடல்
எமது பயணம். எதேச்சையாக கிடைத்த ஓர் எண்ணத்தின் பிரகாரம் நாம் கூடி நின்று கதை
புனரமைக்க ஆரம்பித்தோம். எமது கைகளில் இருந்த காசுகளை திரட்டி ஒரு தீபாவளி நாளி
தனமாகவும் பார்த்தனர். ஒரு சிலர் மட்டும் வாழ்த்தி நின்றனர். அதே உற்சாகத்துடன் ஒருவாரத்
என்பதை உணர்ந்து பல ஆண்டுகாலமாக செயலிழந்து இருந்த கலைமகள் படிப்பகம் என
சற்றும் எதிர்பாராமல் எம்மை நம்பி கிராம மக்கள் இந்த செயற்றிட்டத்திற்காக சுமார் ஒரு இ
சமூகத்தின் ஓர் வித்தியாசமான பார்வை எம்மீது திரும்பியமையும் எம்மை இன்னும் உற்சாகப்
டெங்கொழிப்பு செயற்றிட்டங்களை முன்னெடுத்தோம்.

அப்போது ஒரு சில ஊடகங்களின் பார்வையும் எம்மீது திரும்பியது. ஆயினும் உங்கள் பெ
மழுங்கடித்து விடும் எனப் பலரும் ஆலோசனை கூறினர். ஆயினும் அந்தப் பெயரை மாற்
எங்களை வித்தியாசமாக அடையாளப்படுத்தியது. அந்த கேலித்தனம் தான் ஏனையவர்களி
இத்தனை வாலிபர்களும் திரண்டிருக்கின்றோம். எமது வெற்றியின் சக்தியே அந்த நகைச்சுத்
பெயர் மாற்றுக் கோரிக்கைகள் இல்லாமல் போயின. தொடர்ச்சியாக பாரம்பரிய விளையாட்
கிராமம் மட்டுமல்ல அயல் கிராமத்தில் இருந்தும் அயற் பிரதேசத்தில் இருந்தும் எமது அ
அறிந்தும் வாழ்த்தி ஊக்குவித்தனர். வெறும் 4 மாதங்களுக்குள் எங்கள் சேவைகள் பாராட்டப்பட
வெற்றிடம் பல காலமாக இருக்கின்றது என்பதை உணர முடிந்தது. செய்ய வேண்டிய எவரோ
புலப்பட்டது. அந்த வெற்றிடத்தின் நீள அகலத்தை ஆய்ந்தோம் . ஆம், அந்த வெற்றிடம் போ
புரிந்து கொண்டோம். எமது ஊருக்கு அல்லது எமது பிரதேசத்திற்கு அல்ல எமது இனத்திற்
தான் நாம் அடுத்த பரிமாணத்திற்கு செல்லலாகினோம். போரில் பாதிக்கப்பட்டு அங்கவீனர்க
உணவுக்கே ஏங்கும் ஏழைகளாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களாக, புனர்வாழ்வு கூடங்களில்
ஆயினும் எம்மால் எதனை செய்து விடமுடியும் என்ற கேள்வி எழுந்தது. எங்களால் இயன்றதை
எமது உறவுகளுக்கு எங்களால் இயன்ற உதவியை வழங்கும் நோக்குடன் ஒரு இசை நிகழ்வை
அந்த நிதியைக் கொண்டு கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த போரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள்
என்பவற்றை வழங்கினோம். மிகவும் வெளிப்படைத் தன்மையாக திரண்ட நிதியினையும் அத

இதன் மூலம் புலம்பெயர் உறவுகள் பலரும் எம்மை அறிந்தனர். எம்மீது நம்பிக்கை கொண்ட
உதவிகளை வழங்கச் சிந்தித்த பலருக்கு எமது நடவடிக்கைகள் நம்பிக்கை உடையனவாக தெரி
கிடைத்தன. வடக்கு, கிழக்கு என எமது சேவைகளை விஸ்தரித்தோம். 4 மாதங்களுக்கு ஒருமு
பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவமுகாம்கள், தைப்பொங்கல், பாரம்பரிய விளையாட்டு விழா,
பேசி, அவர்களை மகிழ்வித்து, இசை நிகழ்வுகள், கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் இலவச கண
அமைப்பாக எமது 5 ஆவது ஆண்டினை நிறைவு செய்கின்றோம்!

உத்தியோக பூர்வ இணையம்:- **www.ivvsangam.com**

### முல்லைத்தீவிலிருந்து வாழ்த்துச் செய்தி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் மலர்ந்து ஐந்து ஆண்டுகள் நகர்ந்து பயணிக்கும் தருணமதில் அவர்கள் வழங்கிய பல்வேறு உதவிகளை நினைவு கூர்ந்து நிற்பதில் மட்டற்ற மகிழ் வடைகின்றேன். குறிப்பாக எமது கரைதுறைப்பற்று பிரதேசத்தில்

- பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள்
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத்திறனாளிகளினை தலைமைத்துவமா கக் கொண்ட குடும் பங்களுக்கான வாழ்வாதார உதவிகள்
- பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள்
- சென்ற வருட சிறுவர் மற்றும் முதியோர், மாற்றுவலுவுடையோர் தினத்திற்கு இணை அனுசரணை

போன்ற உதவிகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவர்கள் இனிவரும் காலங்களிலும் சமூகத்திற்கும் தங்கள் சேவை களைத் தொடர வேண்டுவதோடு இச் சங்கம் மென்மேலும் வளர்வத ற்கு எனது வாழ்த்துக் களையும் ஆசிகளையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஐ.பிரதாபன், பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று.**



வலிக
இயற்கை வ
சமயம், கல்வி, க
இளவாலை என்
இளைஞர் கழகம்
வாழ்த்துரை வழ
பல்வேறு மட்டத்தி
நோக்கமாகக் கொண்டு இய ங்கி
பொருளாதார, அபி விருத்தியைக்
திட்டங்களை உரிய முறையிலே
வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி பிர
அந்தவகையிலே இளவாலை
அளப்பரிய சேவையினை ஆற்றி
நிதிப்பங்களிப்போடு கிராமிய மட்ட
அவர்களுக்கான வாழ்வாதாரம், க
நடாத்தியும் பாரம்பரிய விழாக்கள்,
சிறப்பாக முன்னெடுத்து வருவது
ஒரு நிறுவனத்தின் வெற்றியும்
தங்கியுள்ளது. அந்த வகையிலே சி
மேலும் பல ஆண்டுகள் தனது
துறைகளிலும் சிறந்த சேவையினை
ச. சிவஸ்ரீ, பிரதே


SVM
நிறுவனம்
இல. 154,
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

# டாத வாலிபர் சங்கத்தின் சிறப்பு மலர்-06.11.2018



ம்பித்து, பாடல்கள் இயற்றி, முகநூலில் பக்கம் ஆரம்பித்து ஒரு கேலித்தனமாக ஆரம்பித்தது
நின்று கதைபேசும் சந்தியருகே பயன் இழந்து இருந்த பயணிகள் நிழற்குடை ஒன்றை
ீபாவளி நாளில் திறந்து வைத்தோம். அதை ஒரு சிலர் கேலிக்கூத்தாகவும் நகைச்சுவைத்
டன் ஒருவாரத்தினுள் இளவாலை கிராமத்தில் பொருத்தமான பொது வாசிகசாலை இல்லை
படிப்பகம் எனும் கட்டடத்தை ஊர் மக்களிடம் நிதி திரட்டி புனர்நிர்மாணம் செய்தோம். நாம்
சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவிற்கு அதிகமான பணத்தை வழங்கியமையும்
னும் உற்சாகம் கொள்ள வைத்தது. அடுத்த அடுத்த வாரங்களிலேயே இரத்ததான முகாம்,

ும் உங்கள் பெயர் மட்டும் கேலித்தனமாக இருக்கின்றது. உங்கள் சேவைகளை அப்பெயர்
பெயரை மாற்ற நாங்கள் தயாராக இருக்கவில்லை. எமது பெயரின் கேலித்தனம் தான்
னையவர்களில் இருந்து எம்மை வேறுபடுத்திக் காட்டியது. அதன் நகைச்சுவையால்தான்
ந்த நகைச்சுத்தனமான பெயர் என்பதில் உறுதியாக இருந்தோம். காலப்போக்கில் அந்தப்
ய விளையாட்டுப் போட்டி, பொங்கல் விழா, சித்திரை விழா என்பவற்றை நடத்தவே எமது
ும் எமது அமைப்பின் பெயரின் விநோதத்தினால் எம்மை அறிந்து எமது சேவைகளை
ள் பாராட்டப்படுகிறது, வரவேற்கப்படுகின்றது என்ற இடத்தில் குறித்த அந்த சேவைகளுக்கான
ாடிய எவரோ செய்ய தவறியதால்தான் நாங்கள் இவற்றை செய்ய வேண்டியாகியது என்பது
வற்றிடம் போருக்கு பின்னரான எமது இனத்தின் மீள் எழுச்சி என்பதை தெட்டத் தெளிவாக
து இனத்திற்கே எமது தேவை இருக்கின்றது என்பதை சிந்திக்கத் தொடங்கினோம். இங்கு
அங்கவீனர்களாக, விதவைகளாக, தாயை, தந்தையை இழந்த அநாதைகளாக மறுநாள்
வு கூடங்களில் இருப்பவர்களாக எங்கள் உறவுகள் இருப்பது எமது கண்களுக்கு தெரிந்தது.
ால் இயன்றதை நாங்கள் செய்து முடிப்போம் என்று ஆரம்பித்தோம். போரால் பாதிக்கப்பட்ட
சை நிகழ்வை ஒழுங்கு செய்தோம். இதன்மூலம் நுழைவுசீட்டுக்கள் விற்று நிதி திரட்டினோம்.
மாணவர்கள் 40 பேருக்கு தேவையான கற்றல் உபகரணங்கள், பாடசாலை காலணிகள்,
னையும் அதன் மூலமான உதவித்திட்ட விபரங்களையும் முகநூலில் பதிவிட்டோம்.
க்கை கொண்டனர். உதவிகள் வழங்க நினைத்தும் சில போலிகளாலும் சில மோசடிகளாலும்
யனவாக தெரிந்தன. இதன் மூலம் எமக்கு பல தரப்பட்டவர்களிடம் இருந்தும் நிதி உதவிகள்
ளுக்கு ஒருமுறை இரத்ததான முகாம், வருடம்தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, போரால்
ளயாட்டு விழா, சித்திரைப் புத்தாண்டு நாளில் சிறுவர், முதியோர் இலங்களில் சென்று கதை
் இலவச கணனி வகுப்புகள் எனப் பல தரப்பட்ட செயற்றிட்டங்களோடு ஒரு கட்டமைக்கப்பட்ட

முகநூல்:-www.facebook.com/ivvsangam

### வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இயற்கை வளம் பலகொண்டமைந்த வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேசத்திலே
பம், கல்வி, கலை, கலாசாரம் எனப் பல்வேறு துறைகளிலும் மேன்மை பெற்று விளங்கும்
ளவாலை என்னும் ஊரிலே அமைந்து சமூகப்பணி யாற்றிவரும் இளவாலை வருத்தப்படாத
ளைஞர் கழகம் தமது 5 ஆம் ஆண்டு நிறைவிலே வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு
்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கிராமம், பிரதேசம், மாவட்டம் எனப்
வேறு மட்டத்திலும் பல அமைப்புக்கள் நாட்டினதும் நாட்டு மக்களினதும் அபிவிருத்தியை
ண்டு இய ங்கி வருகின்றன. அந்த வகையில் கிராமிய மட்டத்திலே மக்களின் சமூக,
விருத்தியைக் கருத்திற் கொண்டு அவர்களின் தேவைகளை இனங்கண்டு அதற்கான
முறையிலே வகுத்து அவற்றைச் சிறப்புற நடைமுறைப்படுத்துவதனூடக மக்களின்
உயர்த்தி பிரதேசத்தை அபிவிருத்திப் பாதையிலே கொண்டு செல்ல முடியும்.
ல இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்கு
பினை ஆற்றிவருவது இங்கு நோக்கத்தக்கது. குறிப்பாக புலம்பெயர் உற வுகளின்
கிராமிய மட்டத்தில் மட்டுமன்றி மாவட்ட, மாகாண மட்டத்திலும் உரிய வர்களை இனங்கண்டு
ாழ்வாதாரம், கல்வி போன்ற உதவிகளை வழங்கியும் மற்றும் இரத்ததான முகாம்களை
ய விழாக்கள், கருத்தரங்குகள் நடாத்துதல் எனப் பலதரப்பட்ட செயற்றிட்டங்களையும்
்த்து வருவது குறிப்பிடத்தக்கது.
ன் வெற்றியும் தோல்வியும் அந்த நிறுவனத்தின் தலைமைத்துவத்திலும் நிர்வாகத்திலுமே
வகையிலே சிறப்பாக இயங்கிவரும் இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகமானது
டுகள் தனது பணியினை விரிவுபடுத்தி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல்வேறு
சேவையினை வழங்க வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

**வஸ்ரீ, பிரதேசசெயலாளர், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.**

### தலைவரின் உள்ளத்திலிருந்து...



இன்றைய நவீன யுகத்தில் இளைஞர்களுடைய வாழ்வியல் போக்கு வித்தியாசமான பாதையில் சென்று கொண்டிருக்கின்ற வேளையில் சமூக சேவையை உன்னத சேவையாகக் கொண்டு அரும்பணி யாற்றிக் கொண்டிருக்கின்றசங்கஉறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் சிரேஷ்ட உறுப்பினர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எல்லோரையும் பாராட்டி நிற்கின்றேன். இவர்களின் அளப்பெரிய அர்ப்பணிப்புள்ள ஒத்துழைப்பே எங்களுடைய வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது. சுயநலப்போக்கின்றி பொதுநலத்தோடு சேவை செய்கின்ற எம்முடைய சங்கம் தொடர்ந்து ஐந்தாண்டு அல்ல நீடூழிகாலம் பணியாற்ற வேண்டும் என்பதே எமது பேரவா.

மேலும் எமது செயற்றிட்டங்களை சுருக்கமாக நோக்குமிடத்து கல்வி, கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் "உயர்த்தும் கரங்கள்", "அரும்பு" போன்ற செயற்றிட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். இந்நேரத்தில் எமது சேவை சிறப்பானதாக அமைய பண உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய எமது கிராமத்தவர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வாழ் நன்கொடையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் எமது சங்கமானது பல்லாண்டு காலம் சேவையாற்ற, மேன்மேலும் வளர இறைவனின் நல்லாசிகளை வேண்டி வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**செல்வநாயகம் அன்ரன் செல்வக்குமார்**
**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்.(தலைவர்)**

### இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழா வாழ்த்து



தமிழ் மக்கள் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஒரு புதிய சிந்தனைகளோடு சமுதாய மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்பு மிகுந்த அமைப்பாக வளர்ந்து வருவது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. எம் மத்தியில் இளைஞர் சமூகம் எம் தேசத்தில் போரினால் பாதிக் கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக, வாழ்வாதார மேம்பாட்டுக்காக மீண்டும் புத்தெழுச்சி பெற்று விடிவும் விடுதலையும் பெற்றிடத் தம்மை அர்ப்பணிப்பது அளப்பரிய செயற்பாடாகும் எனப் பாராட்டுகின்றேன். நகைச்சுவை உணர்வுகளோடு ஒன்றுபட்டு உவகை கொண்ட இளம் உள்ளங்கள் வருத்தப்படாத இளைஞர் கழகம் ஒன்று கூடிப் புதிய வழிகாட்டிகளாய் சமுதாயத்தில் உழைப்பதை நான் அறிந்து மகிழ்ந்து பாராட்டியிருக்கிறேன். அவர்கள் நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டிருக்கிறேன்.

இளைஞர் சமுதாயத்தில் கல்வி, கணனித்துறையில், தொழில் நுட்பத் தொழில்துறை முயற்சிகளில், விளையாட்டுத் துறையில் இவ் வியக்கம் புதிய வழிகாட்டிகளாய் விளங்குகின்றது. கொள்கை, இலட்சியப் பற்றுள்ள ஒழுக்கமுள்ள ஒரு இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதில், கட்டமைப்பதில் இவ் வாலிபர்கள் வெற்றி பெற்று வருகிறார்கள்.

தமிழினத்தின் விடுதலைக்காக இலட்சோபலட்சம் மக்கள் தாங்கள் உயிர்களையே பலிகொடுத்துத் தியாகம் நிறைந்த எம் தமிழர் சமுதாயத்தில் இளைஞர்கள் சிலர் மதுவுக்கும், போதைக்கும் அடிமையாகிச் சீரழிவதைத் தடுத்து நிறுத்தி ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் வருத்தப்படாத இளைஞர் கழக இளைஞர்கள் வெற்றிபெற உழைக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

தங்கள் மன்றத்தின் ஆண்டு விழாசிறப்புடன் வெற்றிபெற இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாவை.சோ.சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்**

### வாழ்த்துச் செய்தி

ஈழவளத்திருநாட்டின் வடபாலமைந்த யாழ். நகரின் வலிகாமம் பகுதியின் இளவாலையில் செயற்பட்டுவரும் சமூக மட்ட அமைப்புக்களில் இள வாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமும் ஒன்றாகும். இச்சங்கமானது குறித்த பிரதேசத்தைச் சார்ந்த இளைஞர்களினால் சமூகசேவை, சமூகநலன் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு தனது செயற்பாட்டினை சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றது. இவ்வருத்தப்படாத வாலி பர் சங்கத்தின் செயற்பாடானது ஏனைய இளைஞர்களுக்கும் இளைஞர் அமைப்புக்களுக்கும் ஓர் முன்னுதாரணமாகக் காணப்படுவதுடன் பலரது பாராட்டினையும் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகளாக உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், நான்கு மாதங்களுக்கொரு தடவை இரத்ததான முகாம் நடாத்துதல், அரு ம்பு கல்வி செயற்றிட்டம், பாடசாலை மாணவர்களின் கல்விக்கான மாதா ந்த உதவிகள், வெள்ள நிவாரணப்பணி போன்ற பணிகளும் பொங்கல் விழா, சித்திரை வருட புத்தாண்டு விழா, நத்தார் பண்டிகை, மாட்டு வண்டி சவாரிப்போட்டி, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி போன்ற நிகழ்வுகளும் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை முக்கிய அம்சமாகும்.

**உ.யசோதா பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

### தமிழர் தாயகமெங்கும் சேவை பரவட்டும்



வருத்தப்படாத வாலிபர் சங்கம் கடந்த 5 ஆண்டுகளாக தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார, கற்றல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மற்றும் கிராம, பிரதேச மட்டங்களில் பலதரப்பட்ட சமூக சேவைகளையும் ஆற்றி வருவதை அறிவேன்! அத்துடன் கடந்த ஆண்டு தமிழ்தாயகமே திரண்டு உரிமைக்காய் குரல் கொடுத்த "எழுக தமிழ்" நிகழ்வுக்கு பொதுமக்களை திரட்டுவதிலும், அவற்றின் முக் கியத்துவத்தை கிராமங்களில் கொண்டு சேர்ப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தமையையும் இந்த இடத்தில் பாராட்டி நிற்கிறேன்!

உண்மையில் போருக்கு பின்னரான இந்த காலகட்டத்தில், பேரின வாத அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் எமது தமிழ் இளை ஞர்களை போதைப்பொருளுக்கு அடிமைப்படுத்தியும், வாள்வெட்டு என்ற ஆயுத கலாசாரத்தையும் ஏற்படுத்துவதன்மூலமும் அவர்களை திசை திருப்பி தமிழர் தேசத்தின் எதிர்காலத்தை இருள்மயப்படுத்த எத்தனித்து வருகிற போதும், இந்த வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் வாலிபர்கள் அந்த நிகழ்ச்சி நிரலில் சிக்காது, தமது இளமைக் காலத்தை ஆற்றுப்படுத்துவதோடு, தமிழர் தாயக வாழ் மக்களுக்கு தம்மால் இயன்ற சேவைகளை ஆற்றி வருவதென்பது முன்மாதிரியானது!

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இன்னும் பல கிளைகளை பரப்பி தமிழர்தாயகமெங்கும் பரந்துவிரிந்து பல ஆண்டுகளுக்கு சேவையாற்றவேண்டும் என வாழ்த்திநிற்கிறேன்!

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**

### செயலாளரிடமிருந்து..



யாழ்.மாவட்டத்தின் வலிகாம பிரிவினுள் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள இளவாலை கிராமத்தில் கடந்த 5 வருடங்களாக செயற்பட்டு வருகின்றமையினையிட்டு பெருமையடைகின்றோம். எமது சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு 06.11.2018 அன்று பத்திரிகையில் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். எமது சங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் ஒவ்வொரு உறுப்பினர்கள் தலைமை தாங்கி முன்னின்று செயற்படுவது சிறப்பம் சமாகும். எமது சங்கமானது சமூக சேவையை மையமாக கொண்ட தோடு நின்றுவிடாது கல்வி, விளையாட்டு, பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள் போன்ற செயற்பாடுகளையும் ஊக்குவித்து வருகின்றது. எமது சங்கத்தின் செயற்பாடுகளாக உயர்த்தும் கரங்கள் செயற் றிட்டம், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்க ளிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், இரத்ததான முகாம், அரும்பு கல்வி செயற்றிட்டம், பாடசாலை மாணவர்களின் கல்விக்கான மாதாந்த உதவிகள், வெள்ள நிவாரணப்பணி போன்ற பணிகளும் பொங்கல்விழா, சித்திரை வருட புத்தாண்டு விழா, நேத்திரம் சஞ்சிகை வெளியீடு, நத்தார் பண்டிகை, மாட்டு வண்டி சவாரிப்போட்டி, கரப்பந் தாட்ட சுற்றுப்போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி போன்ற நிகழ்வு களும் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கவையாகும்.

நெறி தவறி போகும் இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் எமது இளைஞர்களின் செயற்பாடானது எல்லோருக்கும் ஓர் முன்னுதாரணமாக காணப்படுகின்றது. எமது சங்கம் ஐந்து ஆண்டுகள் என்ன ஐநூறு ஆண்டுகள் நிலைத்து நிற்க வாழ்த்தி நிற்கின்றேன்.

**பொ.மதியழகன், செயலாளர்,**
**வருத்தப்படாத வாலிபர் சங்கம், இளவாலை.**

### சமூக சேவை தொடரட்டும்...



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனது 5 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் இத்தருணத்தில் அவர்களை வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். தானும் தன்வேலையும், பொழுது போக்கும் என்று வாழ்ந்து வரும் சமூகத்தில் சமூகத்தை நோக்கி தங்களால் ஆன சேவைகளை ஆற்ற வேண்டும் என்ற இலட்சியத்தோடு பல்வேறு செயற்பாடுகளை ஆற்றிவரும் சங்கத்தின் செயற்பாடுகளை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். கல்வி, கலாசாரம், மருத்துவம், சுகாதாரம் எனப் பல்வேறு தேவைகளை தம் கருத்திற் கொண்டு தங்களால் என்ன செய்ய முடியும் என்பதை கூடி ஆலோசித்து சமூகத்திற்கு தேவையான பயனுள்ள சேவைகளை ஆற்றி வருகின்றார்கள்.

இவர்கள் சேவை மென்மேலும் தொடரவும் சமூகத்திற்கு உங்கள் சேவை மேலும் கிடைத்து உங்கள் சங்கம் உயர்ந்து நிற்க வாழ்த்துகின்றேன்.

"வருத்தப்படாத வாலிபர் சங்கம்
வருத்தப்படுவோருக்கு வாழ்வளிக்கும் சங்கம்"

அருட்பணி மரியாம்பிள்ளை-யேசுரட்ணம்
**(இளவாலை பங்குத்தந்தையும், இளவாலை மறைக்கோட்ட முதல்வரும்)**





கோபிதன் கட்டட நிர்மாணம்
மற்றும்
கோகுலன் மில்
பிரதான வீதி,
இளவாலை.
077 780 5329
(6347)



மாயவன் ஹாட்வெயர்ஸ்
மாயவன் கிரேசர்
இளவாலை வடக்கு,
இளவாலை.
076 704 7729

# சரத் பொன்சேகாவிடமிருந்து பீல்ட் மார்ஷல் பட்டத்தை பறிக்க மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)

**சரத் பொன்சேகாவிடமிருந்து பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிப்பதற்கான, சட்ட நடைமுறைகள் குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்து வருகிறார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



ஜனாதிபதியையும், முன்னாள் பாதுகாப்புச் செயலரையும் கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக நாமல் குமார என்பவர் தகவல் வெளியிட்டிருந்தார். இதன் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை நடத்தி வருகிறது.

இந்த சதித்திட்டத்தில் சரத் பொன்சேகாவுக்கு தொடர்பு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது என்றும், அதனை மூடி மறைக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்பட்டது என்றும் ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிப்பதற்கான, சட்ட நடைமுறைகள் குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது.

"பீல்ட் மார்ஷல் பதவியானது, செயற்பாட்டில் உள்ள ஒரு இராணுவ நிலையாகும். அவருக்கு ஒரு பணியகமும் முழுமையான இராணுவப் பாதுகாப்பும் இருக்கிறது.

சுதந்திர நாள் அணிவகுப்பு, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளில் அவர் இன்னமும் இராணுவ சீருடையிலேயே பங்கேற்கிறார்.

அவர் இன்னமும் இராணுவ சேவையில் இருக்கிறார் என்பதை இது தெளிவுபடுத்துகிறது" என ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் சட்ட நெறி முறைகளின்படி, பாதுகாப்பு தலைவராக இருப்பதற்கு ஜனாதிபதி அதிகாரம் அளிக்க வேண்டும். எனவே, சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட வேண்டுமென பலர் விருப்பமாம்

## சர்வதேச ஊடகத்திற்கு அவரே கூறினார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடவேண்டுமென பலர் விருப்பம் வெளியிட்டுள்ளனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் கோத்தபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

எனக்கு அமைச்சராவது குறித்து ஆர்வம் இல்லை, ஆனால் பலர் நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவேண்டும் என விருப்பம் வெளியிட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படையினரின் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அவர் இதனை தெரிவித்தார். அவர் பேட்டியளித்த இடத்தில் கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத்தில் கடமையாற்றிய காலத்தில் எடுக்கப்பட்ட படங்களும் மீண்டும் பிரதமராகியுள்ள அவரது சகோதரரின் படங்களும் காணப்பட்டன என அந்த சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

முக்கிய அமைச்சுக்களுக்கும் பதவிகளுக்கும் குடும்ப வாரிசுகளை நியமிக்கும் பாரம்பரியத்தை கொண்ட நாட்டிற்கு இதுவொன்றும் புதியவிடயமல்ல. ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் மீண்டும் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதற்கு தயாராவதை இது புலப்படுத்துகின்றது என புளும்பேர்க் என்ற சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் உள்நாட்டு மோதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ உள்நாட்டு மோதல் கொழும்பையும் அதன் புறநகர்ப்பகுதிகளையும் நாளாந்த கார்க் குண்டுகள், தற்கொலை படை தாக்குதல்கள் மூலம் போர்க்களமாக மாற்றியிருந்ததை சர்வதேச அவதானிகள் பலர் விளங்கிக்கொள்ளவில்லை எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



விடுதலைப்புலிகள் மிகப் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர், படையினருக்கு சமமான ஆயுதங்களை வைத்திருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ யுத்தம் என்பது சிறந்த விடயமில்லை. அது அருவருப்பான விடயம், என தெரிவித்துள்ள கோத்தபாய நாங்கள் யுத்தத்தை உருவாக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் மீண்டும் கடன்களுக்கு சீனாவை நாடும் என தெரிவிக்கப்படுவதை அவர் நிராகரித்துள்ளார்.

நாங்கள் எந்த நாட்டிற்கும் சார்பாக நடக்கவில்லை, இலங்கையுடன் இணைந்து பணியாற்ற விரும்பும் எவருடனும் நாங்கள் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். நாங்கள் சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். ஆனால் அவர்கள் நியாயமாக நடந்துகொள்ளவில்லை என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒழுக்க விழுமியங்களை மதிக்கும் இராணுவம் இலங்கையில் உள்ளது

## அமைச்சர் விஜயதாஸ நற்சான்று

(கொழும்பு)

உலகில் ஒழுக்க விழுமியங்களை மதிக்கும் இராணுவம் இலங்கையில் இருப்பதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சில காலங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தை உலகின் ஒழுக்கம் மிக்க இராணுவம் எனக் கருதிய சிலர் தற்போது இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கல்வியின் தரம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன.

அது தொடர்பில் எதிர்வரும் காலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது. எதிர்வரும் காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒழுக்கம் இல்லாமல் எந்த கற்கையும் சிறந்த பலனை அளிக்காது எனவும் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் நாட்டின் ஒழுக்கமிக்க பல்கலைக்கழகம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்வின் பொருள்

ஒரு பெரிய பாராட்டு விழா நடந்துகொண்டிருந்தது! ரயில்வேயிலே வேலை செய்து கொண்டிருந்த ஒருத்தருக்குத் தான் அந்த பாராட்டு விழா. அதுவும் சாதாரண தொழிலாளியா வேலை செய்து கொண்டிருந்த ஒருத்தருக்கு அந்தப் பாராட்டுவிழா! பல முக்கியமான தலைவர்கள் எல்லாம் வந்திருக்காங்க அவரை பற்றிப் பேசுவதற்காக!

அந்தத் தொழிலாளி அன்றைக்குத்தான் தன்னுடைய வேலையிலே இருந்து 'ரிட்டயர்' ஆகிறார்! எல்லோரும் தான் பதவியிலேயிருந்து ஒரு நாள் 'ரிட்டயர்' ஆகிறாங்க!

இருந்தாலும் எல்லாருக்கும் இந்த அளவுக்குப் பெரிசா விழா நடந்ததில்லை!

ஆனா இவருக்கு நடக்குது! அது ஏன் ? காரணம் இருக்கு! என்ன காரணம் என்பது அவரைப்பற்றி பல பேர் பேசும்போதுதான் புரிஞ்சிது!

ஒருத்தர் பேசினார்:

"இன்றைக்குப் பதவி ஓய்வு பெறுகிற இந்தப் பெரியவர் இருக்காரே இவர் மற்ற எல்லோரையும் போல சாதாரணமானவர் இல்லை!

தன்னுடைய கடமையிலே கண்ணா இருந்தவர். கடமையிலேயிருந்து அவர் தவறியதே இல்லை. என்றைக்கு இந்த பதவியிலே சேர்ந்தாரோ அன்றிலிருந்து இன்றைக்கு வரைக்கும் அவர் ஒருநாள் கூட 'லீவ்' எடுத்தது இல்லை இது ஒருபெரியசாதனை!" என்றார் அவர்.

இன்னொருத்தர் பேசினார்:

"அவர் இந்த வேலையில் எப்படி சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் இருந்து ரிட்டயர் ஆகிறார்! வாழ் நாளிலே அவருக்கு ஒரு சின்ன புரமோஷன் கூட கிடைக்கவில்லை! அப்படி இருந்தும் அவர் மனம் சலிப்படையவில்லை! தளர்ச்சியவில்லை! தொடர்ந்து வேலைக்கு வந்தார்! தன் கடமையை செய்தார்!" அப்படி என்றார் இவர்.

இன்னொருத்தர் பேசினார் :

"ஒரு சமயம் அவரோட சம்சாரத்துக்கு ரொம்ப உடம்பு சுகமில்லாமே போச்சு! அந்த சமயத்திலகூட அவங்களை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு நேரா வேலைக்கு வந்துட்டார்" என்றார். இப்படி இவங்கள் எல்லாம் பேசினது உண்மை தான்!

அப்படித்தான் அந்த பெரியவர் நடந்துகொண்டார். ஒரு நாள் கூட கடமையிலே இருந்து தவறியதில்லை. லீவு நாளில்கூட அவர் வேலைக்கு வந்துவிடுவார். அவரோட வேலை என்ன தெரியுமா?

தினமும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவார். கையிலே ஒரு சுத்தியலோ... இரும்புத்துண்டோ ஏதோ ஒண்ணு வச்சிருப்பார். இதை கையிலே வச்சிகிட்டு பிளாட் பாரத்துலே வந்து நின்றுகொண்டு இருப்பார். ரயில் வந்து நிற்கும்! உடனே இவர் தன் கடமையை ஆரம்பிச்சுடுவார். அதாவது இஞ்சின் லே ஆரம்பிச்சி ஒவ்வொரு பெட்டியா பார்த்திட்டு வருவார்.

ஒரு பெட்டியும் –இன்னொரு பெட்டியும் இணையுற இடம் இருக்குல்லே ! அந்த இடத்துக்கு போவார். கையிலே உள்ள சுத்தியாலே அங்கேரெண்டு தட்டு தட்டுவார். மறுபடியும் வருவார். அடுத்த பெட்டிக்குப் போவார். ரெண்டு பெட்டிக்கும் நடுவாலே போவார் அங்கே போயி வழக்கம் போல சுத்தியாலே தட்டுவார் ...மறுபடியும் வருவார்.... இப்படியே கடைசி பெட்டி வரைக்கும் போவார். இது தான் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை! இதை அவர் ஒழுங்கா செய்தார். ரயில் போய் அடுத்த ரயில் வந்து நிற்கும் உடனே மறுபடியும் இவர் வேலையை ஆரம்பிச்சுடுவார். ஒவ்வொரு பெட்டிக்கு நடுவிலே போயி தட்டிட்டு வருவார்...

இந்த வேலையை அவரு கடைசி வரைக்கும் தவறாமே செஞ்சி முடிச்சிருக்கார். அதனாலே தான் அவருக்கு இந்த பாராட்டுவிழா! பல பேரு பரிசு குடுத்தாங்க! பொன்னாடை போர்த்தினாங்க! பாராட்டுப் பத்திரம் வாசிச்சுக் குடுத்தாங்க... எல்லாத்தையும் வாங்கிக்கிட்டு கடைசியா அவரு நன்றி தெரிவிச்சிப்பேசினார். தொண்டையை கனைச்சிக்கிட்டுப் பேச ஆரம்பிச்சார்.

"எல்லாரும் என்னை அளவுக்கு அதிகமாக புகழ்ந்து பேசினீங்க! ஏதோ என் கடமையை செஞ்சேன்! அதுக்கு மாசா மாசம் சம்பளம் வாங்கிட்டேன்! இன்றைக்கு ரிட்டயர் ஆகிறேன்! அவ்வளவு தான்! இதுக்குப் போய் இவ்வளவு பெரிய விழா தேவை இல்லைங்கறது என் அபிப்பிராயம். ஆனாலும் இந்த கடைசி நேரத்துல ஒரு சந்தேகத்தை உங்ககிட்ட சொல்லிடணும் என்று நினைக்கிறேன்... இவ்வளவு வருஷமும் கடமை தவறாம வேலை செஞ்சேன்!

உண்மைதான்! ஒவ்வொரு ரயில்லேயும்– ஒவ்வொரு பெட்டியுலேயும். தவறாமே போய் தட்டிக்கிட்டிருந்தேன்!

ஆனா ஒரு விஷயம். ஏன் அப்படித் தட்டினோங்கறது இந்த நிமிஷம் வரைக்கும் எனக்கு தெரியாத ஒண்ணு! தட்டச் சொன்னாங்க தட்டினேன்!' னாரு எப்படி இருக்கு இது! இந்தக் கதை யாருக்காகன்னு நினைக்கிறீங்க! ஏன் வாழறோம்ன்னு தெரியாமலேயே இந்த உலகத்துல வாழ்ந்து கிட்டிருக்கிறவங்க சில பேர் உண்டு! அவங்களுக்காக! சும்மா சொல்றேன்னு நினைக்காதீங்க!

சில பேரு செத்துப் போனாருன்னு சொல்லும்போது தான் அப்படி ஒருத்தரு உயிரோட இருந்தாருங்கறதே ஞாபகத்துக்கு வருது! இல்லையா?

## திடீர் அரசியல் குழப்பங்களால்

# 8 ஆயிரம் கோடி ரூபாவை இழக்கும் நிலையில் இலங்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்குழப்பங்களினால், அமெரிக்காவின் பல மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கும் திட்ட உடன்பாடு கையெழுத்திடும் நிகழ்வு அடுத்த மாதம் நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மிலேனியம் சவால் அமைப்பு மூலமாக இலங்கைக்கு ஐந்தாண்டு திட்டத்திற்கு அமைவாக 460 மில்லியன் டொலர் (சுமார் 8000 கோடி இலங்கை ரூபாய்) நிதியுதவியை வழங்க அமெரிக்கா முடிவு செய்திருந்தது.

இலங்கையின் போக்குவரத்து துறையை அபிவிருத்தி செய்வதற்காக, வீதி வலையமைப்புகளை தரமுயர்த்துவதற்கும், கொழும்பு பெருநகர பேருந்து முறையை ஒழுங்கமைப்பதற்கும் இந்த நிதி செலவிடப்படவிருந்தது.

இதற்கமைய 300 கிலோ மீற்றர் நீளமான நகர மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான வீதிகளை புனரமைப்பு செய்வும் முடிவு செய்யப்பட்டது.

நீண்ட பேச்சுக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை அடுத்து, இந்த உதவித் திட்டம் குறித்த உடன்பாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பில் கையெழுத்திடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரசியல் உரிமைகள், சிவில் சுதந்திரம், ஜனநாயகம், ஊழலைக் கட்டுப்படுத்தல், சட்டத்தின் ஆட்சி, தகவல் சுதந்திரம் உள்ளிட்ட பல நிபந்தனைகளுக்கு அமையவே மிலேனியம் சவால் நிதியுதவி வழங்கப்படுகிறது.

எனினும், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களினால், சட்டத்தின் ஆட்சி, நாடாளுமன்ற ஜனநாயகம், சுதந்திரம், அரசியல் உரிமைகள் உள்ளிட்ட மேற்படி நிபந்தனைகள் கேள்விக்குள்ளாகியுள்ளன.

இதனால், அமெரிக்காவின் நிதியுதவி வழங்கும் உடன்பாடு அடுத்தமாதம் கையெழுத்திடப்படுமா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. (இ-7)

# இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு!

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம - எல்லகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

21 வயதுடைய எல்லகல பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இளைஞரின் வீட்டுக்கு வந்த நபரொருவரால் இந்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பின்னர் அவர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டு சந்தேகநபர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# புகையிரத ஊழியர்கள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

புகையிரத கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த நபர்களை கைது செய்யுமாறு புகையிரத தொழிற் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு கைது செய்யவில்லையெனில் இன்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் புகையிரத தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. சிலரது செயற்பாடுகளால் பலர் பாதிப்படைவதாக புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் லால் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 240 | 200 | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 105 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 130 | 130 | 200 |
| தக்காளி | 250 | 340 | 170 | 150 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 140 | 140 | 110 | 200 |
| கரட் | 150 | 160 | 150 | 140 | 300 |
| பூசணி | 60 | 50 | 50 | 30 | 80 |
| புடோல் | 150 | 150 | 50 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 150 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 90 | 140 |
| பாகற்காய் | 250 | 280 | 220 | 60 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 100 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 280 | 320 | 200 | 280 | 300 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 80 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 60 | 120 |
| கறிமிளகாய் | 250 | 240 | 180 | 200 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 140 | 130 | 200 |
| போஞ்சி | 250 | 250 | 220 | 200 | 320 |
| கத்தரிதம்புள்ள | 240 | 200 | 180 | 200 | 240 |
| கீரை-1பிடி | 50 | 60 | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 420 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 50 | 45-50 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 160 | 250 | — | 240 |
| வெங்காயப்பூ | 350 | — | — | 180 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 70 | 120 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1548

Search for people, places and things

### சுஜித்

நமக்கு கிடைப்பது எதுவாகவும் இருக்கலாம்



ஆனால் அதை நமக்குச் சாதகமாக பயன்படுத்துவதுதான் புத்திசாலித்தனம்

### முரளி

புறத்திலிருக்கும் உலகம் ஓர் பிரச்சினையே அல்ல



நமது புத்தியைச் சுற்றியுள்ள உலகம் தான் பிரச்சினையே

### துரை

கோபத்துடன் விலகி இருப்பதை விட உரிமையுடன் திட்டி விடுங்கள்



வாழ்க்கையில் பல பிரிவுகள் உண்டாவதைத் தவிர்த்துவிடலாம்

### விக்னேஸ்

எந்த உறவுமே உங்களை ஏமாற்றியதில்லை என்றால்



நீங்கள் யாருடனும் உண்மையாகப் பழகவில்லை என்று அர்த்தம்

### செல்வி


எந்தவொரு பொருளினதும் அருமையும் பெருமையும்



அதனை எட்ட முடியாதவர்களுக்கே அதிகம் புரியும்

### மாதேஸ்

வாழ்கின்ற காலத்தில் சிறு நேரத்தைப் பொழுது போக்க கழியுங்கள்



வாழ்க்கை முழுவதையும் பொழுதுபோக்காவே கழித்துவிடாதீர்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்களை அழிவுப்பாதையில் இழுத்து செல்வது தமிழ்த் தலைமைகளுக்குப் புதிய விடயமல்ல

## மகிந்தவை சந்தித்த பின் கருணா கருத்து



(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரவளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பு குறித்து இதன்போது கருத்து வெளியிட்ட கருணா,

"தமிழ் மக்களை அழிவுப் பாதையில் இழுத்துச் செல்வது தமிழ்த் தலைமைகளுக்கு புதியதல்ல" என்றும் கருணா தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசியல் குழப்பங்கள் உச்சம்

# டில்லிக்குப் புறப்பட்டார் ஒஸ்ரின் பெர்னாண்டோ



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் குழப்பங்கள் உச்சமடைந்துள்ள சூழலில், இந்தியாவுக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடந்த வியாழக்கிழமை டில்லியைச் சென்றடைந்துள்ளார்.

டில்லியில் இலங்கைத் தூதுவராக 25 மாதங்கள் பணியாற்றிய சித்ராங்கனி வகீஸ்வரா கடந்த 31ஆம் திகதி கொழும்புக்கு திரும்பினார்.

இந் நிலையிலேயே, ஒஸ்ரின் பெர்னாண்டோ கடமையைப் பொறுப்பேற்பதற்காக, டில்லிக்குச் சென்றுள்ளார்.

டில்லியைச் சென்றடைந்த பின்னர் கருத்து வெளியிட்டுள்ள ஒஸ்ரின் பெர்னாண்டோ, 'நாங்கள்( இலங்கையும் இந்தியாவும்) நண்பர்கள் மாத்திரமல்ல, உறவினர்களும் கூட." என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் குழப்பங்கள் உச்சமடைந்துள்ள நிலையிலும், இலங்கையில் புதிதாக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை இந்தியா இன்னமும் அங்கீகரிக்காத சூழலிலும், புதிய தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ டில்லியில் கடமையைப் பொறுப்பேற்கச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பட்ஜெட்டை சமர்ப்பிக்க தயாராகி வருவதால் நாடாளுமன்றை கூட்ட தாமதம் ஏற்பட்டுள்ளது

## புதிய பிரதமர் புது விளக்கம்

(கொழும்பு)

வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்குத் தயாராகி வருவதால் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு தாமதமாகுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அல்ஜெஸீரா ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின் போதே மகிந்த இதனைத் தெரிவித்தார். தற்போது வரையிலும் நாடாளுமன்றத்தில் 113 என்ற பெரும்பான்மை கிடைத்துள்ளதாக மகிந்த தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பிற்குட்பட்டே தனக்கு பிரதமர் நியமனம் வழங்கப்பட்டது. தான் தொடர்ந்து பிரதமராக செயற்படுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 9 விதி எண் 1

செவ்வாய், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தேசநலனில் அதிக அக்கறை கொண்டவர்கள். தைரியமாக எதையும் சாதிக்கும் குணமுடையவர்கள். நுண்ணறிவு மிக்கவர்கள். பொதுஅறிவு மிக்கவர்கள். சுதந்திரமாகவே வாழ ஆசைப்படுவார்கள். கவர்ச்சியான தோற்றமுடையவர்கள். உடல்பலமும் மனபலமும் உடையவர்கள். தான் எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பார்கள்.

எதிலும் போராடியே வெற்றி பெறுவார்கள். எந்த நேரத்திலும் உடல் வருத்தம் பார்க்காது ஓய்வின்றி உழைப்பார்கள்.


பொது விடயத்தில் அதிக நாட்டமுடையவர்கள். இருந்தாலும் மற்றவர்களைப் பாதிக்குமளவு நடந்து கொள்ள மாட்டார்கள். சிலர் மந்தப் புத்தியுடனும் சிலர் சுறுசுறுப்பாகவும் காணப்படுகின்றனர். முரட்டுக்குணம் படைத்தவர்கள்.

ஆதலால் சிலநேரங்களில் பிரச்சினைகளில் தலையிட்டு மாட்டிக் கொள்கிறார்கள். ஆடம்பரமான வாழ்க்கையை விரும்புவார்கள். அனைத்து இன்பமயமான காரியங்களிலும் ஈடுபடுவார்கள்.

சென்ற இடமெல்லாம் சிறப்புகள் உண்டாகும். சுதந்திர உணர்ச்சியும் கவர்ச்சியும் மிக்கவர்கள். எப்போதும் உடலையும் ஆடையையும் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். நல்ல நிர்வாகத் திறமை வாய்ந்தவர்கள். கலை இலக்கிய ஈடுபாடு மிக்கவர்கள். வாக்கு பலமுடையவர்கள்.

அயராத உழைப்பாளிகள். நாட்டைக் காக்கும் நல்லவர்கள். வல்லவர்கள். தேசத்தைக் காக்கும் தியாகிகள். விவேகமுடையவர்கள். விநோத புத்தியுடையவர்கள். மனதில் ஞானதீர்க்கம் இருக்கும். நன்மையை ஆக்குபவராகவும் தீமையை அழிப்பவராகவும் செயற்படுவார்கள். கம்பீரம் உடையவர்கள். கருணையின் வடிவானவர்கள். பூமியின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள். இவர்கள் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். தனிப்பட்ட தீவிரவாதக் குணமிருக்கும். மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள் என்பது கனவிலும் நடக்காத ஒன்று. தனது இச்சைப்படியே அனைத்தையும் செய்வார்கள். மனோபலமிருக்கும். ஆதிக்க சக்தியுடையவர்கள். போதை வஸ்துக்கள், சிற்றின்ப ஆசைகள் அதிகம் உடையவர்கள். கடினத்தன்மை உடையவர்கள். சிந்திக்காமல் சில காரியங்கள் செய்து பின்னர் வருத்தப்படுவார்கள். இருபாலார்களிலும் சிறந்த நண்பர்கள் அமைவார்கள். பல சோதனையைக் கடந்து அனுபவசாலிகள் ஆகின்றனர். இவர்கள் இயற்கைக் காட்சிகள், மலைகள், அருவிகள், மலர்கள் போன்றவற்றைப் பார்த்து மனம் பூரித்துப் போவார்கள். தனது கருத்துக்களைக் காரசாரமான தொனியில் பேசுவார்கள். இது மற்றவர்களை எரிச்சலடையச் செய்யும்.

அரசியல் மற்றும் இலக்கிய ஈடுபாடுகள் இருக்கும். செலவு செய்யாமலேயே காரியம் சாதிப்பார்கள். உள்மனதில் ஒருவிதப் போராட்டம் இருக்கும். முகம் அமைதியுடனும் மனம்




அலைபாய்ந்து கொண்டும் இருக்கும். இராஜதந்திரம் மிக்கவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கணக்குப் பார்த்து வைத்திருப்பார்கள். வாதம் செய்யக் கூடியவர்கள். சூழ்ச்சிகள் மறைந்திருக்கும். சிலர் சண்டைகள் போடுவதில் அதிகப் பிரியம் உடையவர்கள். மற்றவர்களுக்குச் சண்டைகள் மூட்டிவிட்டு வேடிக்கை பாப்பார்கள். இவர்கள் சாந்தி· சமாதானத்தை விரும்ப மாட்டார்கள். பலரது நட்புகள் கிடைக்கும். தாய் மீதும் தாய்நாட்டின் மீதும் பற்று இருக்கும். பாசம் இவர்களின் ·மனதைக் கட்டிப்போட்டுவிடும். எதிலும் தீவிரமாக உழைத்து மூளை பலத்தால் வெற்றி பெறுவார்கள். எல்லா விடயத்தையும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். சுதந்திரமான மனிதர்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க ஆசைப்படுவார்கள். மற்றவர்களின் கேள்விகளுக்கு உடனே பதிலளிப்பார்கள். காதல் வலையில் எளிதில் விழுவார்கள். அதேநேரம் எளிதில் உதறியும் தள்ளி விடுவார்கள். எதையும் சாதிக்கும் எண்ணமுடையவர்கள். இவர்கள் பணவிடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்கின்றார்கள்.

செய்யும் தொழிலில் அதிகத் திறமையும் தன்னம்பிக்கையும் உடையவர்கள். உற்சாகத்துடன் காட்சியளிக்கும் இவர்கள் பல கலைகள் அறிந்தவர்கள். மருத்துவம், சட்டம், அரசியல், இலக்கியம், நிர்வாகம், சினிமா போன்ற துறைகளில் சிறப்படைவார்கள். தன்மீது அன்பு வைத்தவருக்கு அரணாக இருப்பார்கள். இயற்கைக் காட்சிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள்.

உலக அனுபவமிருக்கும். எதிரியை வீழ்த்துவார்கள். ஆன்மீக ஈடுபாடு இருக்கும். தனது மனதில் உதித்த கருத்துக்களை உரத்த குரலில் பகிரங்கமாகவே வெளியிடுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

6,15,24,5,14,23,9,18,27, 1,10,19,28

**துரதிர்ஷ்ட திகதிகள்**

8,17,26,2,11,20,29

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர்நிலம், மஞ்சள், பொன்னிறம், சிவப்பு.

**துரதிர்ஷ்ட நிறங்கள்.**

கறுப்பு, பச்சை, இருண்ட நிறங்கள்

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

பவளம், மாணிக்கம், புஷ்பராகம், சூரியகாந்தக் கல், பிளட் ஸ்டோன், கார்னட்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

88



“ஆசியாவில் வர்த்தகம் நடத்தும் நோக்குடன் இங்கிலாந்தில் 1600 இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனி (English East India Company) நிறுவப்பட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி இந்த வர்த்தக நிறுவனம் மூலமாகவே நடத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விக்டோ ரியா மகாராணி இந்தியாவின் பேரரசியாக பிரகடனப்படுத்தப்படும் வரை ஆங்கிலேயர் ஆட்சி வர்த்தக நிறுவனத்தின் ஆட்சியாகவே அமைந்தது”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

போர்த்துக்கீச மாலுமி வாஸ் கொடகாமா இந்தியாவுக்கு வந்த ஆண்டிலிருந்து ஒரு நூற்றாண்டு காலமாக அதாவது பதினாறாம் நூற்றாண்டு முழுவதிலும் ஆசியாவில் நிலவிய ஐரோப்பிய மேலாதிக்கம் போர்த்துக்கீசர் மேலாதிக்கமாகவே விளங்கியது.

அவர்களுக்கு எதிர்ப்புக் கொடுக்க வேறொரு வல்லரசும் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு வரவில்லை. எதிர்ப்புக் கொடுக்கும் நிலையில் இருந்த இன்னோர் அத்திலாந்திக் கரையோர வல்லரசாகிய ஸ்பானியா, பசுபிக் கரையோர நாடுகளில் மட்டும் அதிகாரம் செலுத்தியது.

இதற்குக் காரணம் கத்தோலிக்க வல்லரசுகளாகிய ஸ்பானியாவும் போர்த்துக்கலும் கத்தோலிக்கப் பாப்பரசரின் அனுசரணையுடன் உலகை இரண்டாகத் தமக்குள் பிரித்துத் தத்தம் ஆதிக்கத்தை வரையறுத்துக் கொள்ள உடன்பட்டமையே ஆகும்.

இதன்பிரகாரம் இந்து சமுத்திரப் பிரதேசங்களாகிய ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் போர்த்துக்கல்லும் பசுபிக் சமுத்திரத்தை அண்டிய அமெரிக்கப் பிரதேசங்களில் ஸ்பானியாவும் மேலாண்மை பெற்றிருந்தன.

எனினும் புதிதாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த அத்திலாந்திக் கரையோர நாடுகளாகிய இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேற்கூறிய ஸ்பானிய- போர்த்துக்கீச உடன்படிக்கைக்குக் கட்டுப்பட மறுத்தன.

இந்நாடுகள் கத்தோலிக்கத்தை எதிர்த்து புரட்டஸ்தாந்து மதத்தை ஆதரித்த நாடுகளாகையால் பாப்பரசரின் ஆணைக்குக் கட்டுப்படவும் மறுத்தன.

இதனால் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இந்நாடுகளில் ஆசிய வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் நோக்கம் கொண்ட நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இதன் விளைவாகப் போர்த்துக்கீசருடைய மேலாதிக்கத்தை ஆசியாவில் எதிர்க்கும் புதிய ஐரோப்பியச் சக்திகளாகப் பிரான்ஸ், ஒல்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் பதினேழாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்றன.

இப்புதிய ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் அந்நாடுகளின் அரசாங்கங்கள் செலுத்திய ஆதிக்கமாக அமையவில்லை. அந்த வகையில் போர்த்துக்கல் செலுத்திய ஆதிக்கம் இவற்றின் ஆதிக்கத்திலிருந்து வேறுபட்டதாகக் காணப்பட்டது.

இப்புதிய வல்லரசுகளின் ஆதிக்கம் ஆசியாவில் வர்த்தக நிறுவனங்கள் மூலமாகவே முதலில் நிலைநாட்டப்பட்டன.

ஆசியாவில் வர்த்தகம் நடத்தும் நோக்குடன் இங்கிலாந்தில் 1600 இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனி (English East India Company) நிறுவப்பட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி இந்த வர்த்தக நிறுவனம் மூலமாகவே நடத்தப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விக்டோரியா மகாராணி இந்தியாவின் பேரரசியாக பிரகடனப்படுத்தப்படும் வரை ஆங்கிலேயர் ஆட்சி வர்த்தக நிறுவனத்தின் ஆட்சியாகவே அமைந்தது.

ஆங்கிலேய வர்த்தகர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி ஒல்லாந்த வர்த்தகர்களும் தங்கள் கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்தை 1602 இல் அமைத்தனர்.

இது ஒல்லாந்த மொழியில் Veerengde Ost Indische Compagnie (VOC) எனப் பெயர் பெற்றது. அதாவது ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி என்பதாகும். ஒல்லாந்தர் நாணயங்களில் காணப்படும் VOC என்பது மேற்படி வர்த்தக நிறுவனத்தைக் குறிக்கும்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து பிரெஞ்சு வர்த்தகர்களும் தங்கள் பிரெஞ்சுக் கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்தை அமைத்தனர்.

இங்கு கிழக்கிந்தியா என்பது இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஆசியப் பிரதேசத்தைக் குறிக்கின்றது. இவ்வாறே மேற்கிந்தியா என்பது அமெரிக்கப் பிரதேசங்களைக் குறிக்கின்றது.

மேற்கூறிய வர்த்தக நிறுவனங்கள் அமைக்கப்பட்ட பின் ஆசியாவில் ஆங்கிலேய ஒல்லாந்த மற்றும் பிரெஞ்சுக்காரர் துரித வர்த்தக முயற்சியில் ஈடுடலாயினர். இந்நடவடிக்கை போர்த்துக்கீசருக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இறுதியில் இந்த ஐரோப்பியர்களுடைய போராட்டங்களின் விளைவாக இந்தியாவில் ஆங்கிலேயரும் இலங்கையில் ஒல்லாந்தரும் ஆதிக்கம் பெற்றனர்.

ஆங்கிலேயர் பிரெஞ்சுப் படைகளை வெற்றி கொண்டதால் பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் ஏற்படவில்லை. அதே போன்று ஒல்லாந்தர் பிரெஞ்சுப் படைகளைத் திருகோண மலையிலிருந்து விரட்டி அடித்ததால் பிரெஞ்சு ஆதிக்கம் இலங்கையிலும் ஏற்பட வாய்ப்பு இல்லாமற் போயிற்று.

பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவிலோ இலங்கையிலோ ஏற்படாது போக அப்பால் இன்றைய கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தெற்கிழக்காசியப் பிரதேசங்களுக்குச் சென்ற பிரெஞ்சு வர்த்தகர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டினர்.

ஒல்லாந்தர் இலங்கையிலிருந்து ஆங்கிலேயரினால் 1796 இல் அகற்றப்பட்ட பின் இந்தோனேசியத் தீவுகளை தங்கள் ஆதிக்கப் பிரதேசமாகக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு பதினேழாம் நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்ற ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே ஆட்சிமுறை மற்றும் கொள்கை ஆகியவற்றைப் பொறுத்துக் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன.

முதலில் வந்த போர்த்துக்கீசர் துறைமுகப் பகுதிகளை மட்டும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வர்த்தகத்தில் ஆதிக்கம் பெற முயன்றனர். இதனால் இந்தியாவில் கள்ளிக்கோட்டை மற்றும் கோவா போன்ற இடங்களிலும் இலங்கையில் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலும் தென்கிழக்காசியாவில் மலாக்கா போன்ற இடங்களிலும் தம் ஆதிக்கத்தை நிறுவினர்.

(தொடரும்)

# ஊழல் மோசடி குற்றச்சாட்டு; சவுதி இளவரசர் காலித் விடுதலை



(றியாத்)

ஊழல் மோசடி குற்றச்சாட்டில் இடம்பெற்ற கைது நடவடிக்கைகளை விமர்சித்த குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சவுதி இளவரசர் காலித் பின் தலால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சவுதி மன்னர் சல்மானின் மருமகனான இவர் கடந்த ஜனவரி மாதம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 10 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் அவரது சகோதரனும் பிரபல தொழிலதிபருமான அல் வாலித் பின் தலாலை அவர் சந்தித்துள்ளார். குறித்த இருவருக்குமிடையிலான சந்திப்பை நீதிமன்றம் தடைசெய்திருந்த நிலையில், விடுதலையின் பின்னர் சந்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சவுதி மன்னர் சல்மானுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டின் பிரகாரமே அவர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிய ஊழல் மோசடி குற்றச்சாட்டில் இவ்வருட ஆரம்பத்தில் சவுதியின் 200 இற்கும் மேற்பட்ட இளவரசர்கள், அமைச்சர்கள் மற்றும் தொழிலதிபர்கள் அந்நாட்டு மன்னரின் உத்தரவின் பேரில் அதிரடியாக கைதுசெய்யப்பட்டனர்.

சட்டத்தின் முன் நிறுத்தாமல் அவர்களை தன்னிச்சையாக கைதுசெய்த தாக விமர்சித்த குற்றத்திற்காகவே இளவரசர் காலித் பின் தலால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்

## -ஐ.நா. வலியுறுத்து-

(ஜெனிவா)

அண்மைக்காலமாக நன்கு அறியப்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள ஊடக சுதந்திரத்தை பற்றி ஐக்கிய நாடுகள் சபை கவலை அடைந்துள்ளது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் சர்வதேசத்தை வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலையைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

2013 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி மாலியில் இரண்டு பிரெஞ்சுப் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 1,010 ஊடகவியலாளர்கள் தங்களது பணியைச் செய்ததற்காக படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றில் பத்தில் ஒன்பது கொலைகளுக்கு இன்று வரை தண்டனை வழங்கப்படவில்லை என்பதையும் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும், குற்றவாளிகளை நீதிமன்றுக்கு கொண்டு வருவதற்கும் ஐக்கிய நாடுகள் சபை, உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (7)

# திறமையான வெளிநாட்டினருக்கு 'கிரீன் கார்ட்' வழங்கப்படும்

## ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

திறமையான வெளிநாட்டினருக்கு 'கிரீன் கார்ட்' வழங்கப்படும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்து உள்ளதால் கிரீன்கார்ட் விண்ணப்பித்து காத்திருக்கும் வெளிநாட்டினருக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

அமெரிக்காவில் பணிபுரியும் வெளிநாட்டினர் கிரீன் கார்ட் அல்லது குடியுரிமைக்காக விண்ணப்பித்து பல ஆண்டுகளாக காத்திருக்கின்றனர். அவர்களில் இந்தியர்கள் மட்டும் 6இலட்சம் பேர் அடங்குவர்.

தங்களுக்கு கிரீன்கார்ட் மூலம் குடியுரிமை கிடைக்கும் என காத்திருக்கும் நிலையில் ஜனாதிபதி ட்ரம்ப் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

அதனால் அவர்களின் எண்ணம் ஈடேறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் ட்ரம்ப் ஊடகவியலாளர் சந்திப்பின்போது சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்கள் குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அவர், ஆயிரக்கணக்கானவர்கள் சட்ட விரோதமாக நாட்டில் குடியேறியுள்ளனர். அவர்களால் திறமையான வெளிநாட்டினருக்கு சட்ட பூர்வ குடியுரிமை கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கிரீன் கார்ட் பெற விண்ணப்பித்து அதற்காக இலட்சக் கணக்கானோர் பல ஆண்டுகளாக காத்திருக்கின்றனர். அவர்கள் திறமைசாலிகள். எந்த பணியையும் மிக சரியாக செய்கின்றனர். அவர்கள் நமக்கு தேவை.

ஏனெனில் நமது நாட்டில் (அமெரிக்காவில்) பல கம்பனிகள் உள்ளன. அவற்றில் பணிபுரிய ஊழியர்கள் தேவை. திறமையின் அடிப்படையில் பணியில் சேர்ந்தவர்கள். எனவே அவர்களுக்கு கிரீன் கார்ட் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (7)

## எல்லையில் துப்பாக்கிச்சூடு

# இந்தியத் தூதரை அழைத்து பாகிஸ்தான் கடும் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

சர்வதேச எல்லையில் இந்திய படைகள் நடத்திய துப்பாக்கிச்சூடு குறித்து இந்தியத் தூதரை அழைத்து பாகிஸ்தான் தனது கண்டனத்தை பதிவு செய்தது.

காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.

இதற்கு இந்திய வீரர்களும் சரியான பதிலடி கொடுத்து வருகின்றனர். அந்தவகையில் நேற்று முன்தினம் அங்கு இந்திய படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பாகிஸ்தானின் பிம்பர் பகுதியை சேர்ந்த முனாசா பிபி (வயது 22) என்ற இளம்பெண் உயிரிழந்ததாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்து உள்ளது.

அதுமட்டுமன்றி இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய துணை தூதர் ஜே.பி.சிங்குக்கு சம்மன் அனுப்பி நேரில் அழைத்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் முகமது பைசல், அவரிடம் நேரிலும் கண்டனத்தை பதிவு செய்தார்.

பாகிஸ்தான் எல்லையில் மக்களின் குடியிருப்பு பகுதிகளில் இந்திய வீரர்கள் அத்துமீறி தாக்குதல் நடத்துவதாகவும், இது சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரானது எனவும் பைசல் கூறினார்.

இந்தியாவின் அத்துமீறிய தாக்குதல்கள் பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதாகவும் அவர் தெரிவித்தார். (7)

# 3வது அணி அமைத்து மோடி மீண்டும் பிரதமராக வாய்ப்பளிக்கக்கூடாது

## -திருமாவளவன் கோரிக்கை-



(சென்னை)

பாரதீய ஜனதா ஆட்சி மீண்டும் வந்துவிடக் கூடாது. மோடி மீண்டும் பிரதமராக வாய்ப்பளிக்கக் கூடாது என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஊழலை ஒழிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த மத்திய பா.ஜனதா அரசு அதற்கு நேர்மாறாக மூவாயிரம் கோடியில் பட்டேலுக்கு சிலை அமைத்தது ஏழை மக்களை அவமதிக்கும் செயல். தற்போது அயோத்தியில் மீண்டும் நூறு அடியில் ராமர் சிலை வைப்பதாக கூறியுள்ளார்கள். படேலின் சிலை அமைத்து, காந்தியின் புகழை மறைக்கும் பா.ஜனதாவை அகற்ற, மதச்சார்பற்ற சக்திகள் ஒன்றிணைய வேண்டும்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள இருபது தொகுதிக்கான இடைத்தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, தி.மு.கவிற்கு ஆதரவு அளித்துள்ளது. மற்ற தோழமை கட்சிகளும் தி.மு.கவிற்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் வேட்பாளராக போட்டியிடுகிறீர்களா என்று ஊடகவியலாளர்கள் என்னிடம் கேள்வி எழுப்பினார்கள். நான் தி.மு.க. கூட்டணியில் அங்கு போட்டியிடுவேன் என்றேன். இதில் எந்த முரண்பாடும் இல்லை.

தேசத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து, மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது. பாரதிய ஜனதா ஆட்சி மீண்டும் வந்து விடக்கூடாது. இதற்கான முயற்சிகளில் அகில இந்திய அளவில் அனைத்து தோழமை கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

இந்த நிலையில் ராகுல் காந்தியுடன் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு சந்தித்தது வரவேற்கத்தக்கது. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை பிரதம வேட்பாளராக ஏற்றுக் கொண்டுள்ளோம். மூன்றாவது அணி அமைத்து, யாரும் மோடி மீண்டும் பிரதமராக வாய்ப்பளிக்கக்கூடாது.' எனத் தெரிவித் தார். (7)

## பட்டினியால் உயிரிழந்த 7 வயது சிறுமி



(சனா)

ஏமனில் பட்டினியால் உயிரிழந்த 7 வயது சிறுமியின் ஒளிப்படம் அனைவரையும் கண்கலங்க வைத்துள்ளது.

தென் மேற்கு ஆசிய நாடான ஏமனில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஹவுத்தி கிளர்ச்சிப்படைக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகிறது.

இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயற்படுவதுடன், ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவளித்து வருகின்றது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் ஏமனில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற இரண்டு வருடங்களில் சுமார் 3 இலட்சத்துக்கு அதிகமான குழந்தைகள் பிறந்துள்ளனர்.

ஏமனின் ஒட்டுமொத்த இளம் தலைமுறையும் வறுமையிலும், வன்முறையிலும் வளர்கின்றனர் என ஐ.நா. வேதனை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அகதிகள் முகாமிலிருந்த அமல் ஹூசேன் என்னும் 7 வயது சிறுமி பட்டினியால் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். (7)

# ஐ.எஸ் பயங்கரவாதிகள் - தலிபான்கள் மோதல்

## - 21 பேர் உயிரிழப்பு -



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் கோக்யானி மாவட்டத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தலிபான்கள் இடையே வெடித்த மோதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

இந்த மோதல் சம்பவம் கோக்யானி மாவட்டத்துக்குட்பட்ட ஸாவா பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தலிபான்கள் 18 பேரும், ஐ.எஸ்.பயங்கரவாதிகள் 3 பேரும் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நன்கர்ஹர் மாகாணத்துக்கும் தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள மற்றைய பகுதிகளிலும் அடிக்கடி மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது பொது மக்களின் உயிர்களைக் குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்களையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(7)

# சீனாவில் கோர விபத்து 15 பேர் உயிரிழப்பு

## - 44 பேர் படுகாயம் -



(பீஜிங்)

சீனாவில் இடம்பெற்ற கோர விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், 44 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வடமேற்கு சீனாவின் கன்சு மாகாணத்திலுள்ள அதிவேக வீதியில் 31 வாகனங்கள் அடுத்தடுத்து மோதியதனாலேயே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


இதன்போது காயமடைந்தவர்களில் 10 பேர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், விபத்து இடம்பெற்ற கன்சு மாகாணத்திலுள்ள அதிவேக வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், குறித்த விபத்து தொடர்பில் கனரக வாகனம் ஒன்றின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)

# எல்லையில் இராணுவத்தை குவித்து அரசியல் ஸ்டன்ட் அடிக்கும் ட்ரம்ப்

## முன்னாள் ஜனாதிபதி காட்டம்



(வோஷிங்டன்)

குடியேறிகளை தடுப்பதாக கூறி எல்லைப்பகுதியில் 5 ஆயிரம் இராணுவத்தினரை குவித்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "அரசியல் ஸ்டன்ட்' அடிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ஒபாமா குற்றம்சாட்டியுள்ளார

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பு வகிக்கும் டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டின் குடியுரிமை விவகாரங்களில் மிகவும் கறாராக உள்ளார். சட்டவிரோதமான குடியேற்றங்களை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.

எல் சல்வடோர், ஹோன்டுராஸ், குவாத்தமாலா ஆகியலத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து சுமார் 7 ஆயிரம் குடியேறிகள் அமெரிக்காவுக்குள் குடியேறுவதற்காக மெக்சிகோ நாட்டின் வழியாக வந்து கொண்டிருப்பதாக தெரிவித்த ட்ரம்ப், அவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் அமெரிக்கா - மெக்சிகோ எல்லைப் பகுதியில் சுமார் 5 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்களை அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில், ட்ரம்ப்பின் இந்த நடவடிக்கையை "அரசியல் ஸ்டன்ட்' என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா குற்றம் சாட்டியுள்ளார்.

ஜோர்ஜியா மாநிலத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய ஒபாமா, 'அமெரிக்காவை நோக்கி அடைக்கலத்துக்காக வரும் ஏழை அகதிகளால் நாட்டின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு விட்டதாக தற்போது அரசு கூறுகிறது.

கைகளில் குழந்தைகளுடன் பலநூறு மைல்கள் நடந்துவரும் அவர்களை தடுத்து நிறுத்துவதற்காக நமது வீரம்மிக்க இராணுவத்தை அனுப்பி வைத்துள்ளார்.

தங்கள் குடும்பத்தினருடன் இருக்க வேண்டிய நேரத்தில் நமது இராணுவத்தை சேர்ந்த வீரர்-வீராங்கனைகள் இவர்களின் அரசியல் ஸ்டன்ட்டுக்காக எல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதுவா நாட்டுப்பற்று? இது நாட்டுப்பற்றில்லை. வெறும் அரசியல் ஸ்டன்ட் மட்டும் தான்.

தேர்தல்கள் வரும் காலத்தில் இதுபோல் பேசுவதும், தேர்தலுக்குப் பின்னர் இதை எல்லாம் மறந்து விடுவதும் இவர்களுக்கு சகஜமாகி விட்டது என்று ஒபாமா மேலும் தெரிவித்தார். (7)

# இந்தோனேசியா விமான விபத்து

# மீட்புப் பணியில் ஈடுபட்ட ஆழ்கடல் நீச்சல் வீரர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் விமான விபத்து நேரிட்ட இடத்தில் விமானத்தின் பாகங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த ஆழ்கடல் நீச்சல் வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து நேர்ந்த இடத்தில், உயிரிழந்தவர்களின் உடல்களையும், விமானத்தின் பாகங்களையும் தேடும் பணியில் நீச்சல் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் சியாச்ருல் ஆன்டோ என்ற இந்தோனேஷிய மீட்புப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார்.

கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி ஜாவா கடற்பரப்பில் விழுந்து விபத்துக்குள்ளான லயன் எயார் விமானத்தில் பயணித்த 189 பேரும் உயிரிழந்தனர். இதையடுத்து குறித்த கடற்பரப்பில் மீட்புப்பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்க கூட்டுப்படைத் தாக்குதல் பொதுமக்கள் 15 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து போரில் ஈடுபட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்காக சிரியா அரசு ஆதரவு படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சியை எதிர்த்து அங்கு போராடிவரும் பல்வேறு புரட்சிப் படைகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில், கிழக்கு சிரியாவின் ஹஜின் பகுதியில் நேற்று முன்தினம் அமெரிக்க கூட்டுப் படையினர் திடீரென வான்வெளி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 5 குழந்தைகள் உட்பட 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என சிரியாவில் செயற்படும் மனித உரிமை அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (7)

# எகிப்தில் துப்பாக்கிச்சூடு ஏழு பேர் உயிரிழப்பு

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் மத்திய பகுதியில் உள்ள மின்யா மாகாணத்தில் காப்டிக் கிறிஸ்தவர்கள் சென்ற பேருந்தின் மீது நேற்று முன்தினம் ஆயுதமேந்திய நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் உயிரிழந்தனர்.





காப்டிக் எனப்படும் பழைமைவாத கிறிஸ்தவர்கள் எகிப்து உள்ளிட்ட சில நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் எகிப்து நாட்டில் மிக அதிகமாக உள்ளனர்.

இந்நிலையில், எகிப்து நாட்டின் மத்திய பகுதியில் உள்ள மின்யா மாகாணத்தில் காப்டிக் கிறிஸ்தவர்கள் சென்ற பேருந்தின் மீது ஆயுதமேந்திய நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் மேலும் சிலர் காயமடைந்ததாகவும் எகிப்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. (7)

# பொருளாதாரத் தடைகளை நீக்காவிட்டால் மீண்டும் அணுவாயுதப்பாதைக்கு செல்வோம்

## அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்

(பியாங்யாங்)

எங்கள் நாட்டின்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்காவிட்டால் மீண்டும் அணு ஆயுதப் பாதைக்கு செல்வோம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

சிங்கப்பூரில் கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

உலகமெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த பேச்சுவார்த்தையின்போது, கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சம்மதம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமெரிக்காவுடன் அவர் ஒரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். அதைத்தொடர்ந்து பெரிய ளவில் முன் னேற்றம் ஏற்படாவிட்டாலும், வடகொரியா அணுகுண்டு சோதனையோ, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையோ நடத்தவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் ட்ரம்பை மீண்டும் சந்தித்து பேச விருப்பம் தெரிவித்து கிம் ஜாங் உன் கடிதம் எழுதினார். அதன் எதிரொலியாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் மைக் போம்பியோ வடகொரியாவுக்கு வந்து கிம் ஜாங் உன்னை சந்தித்து பேசினார்.

விரைவில் இரண்டாவது முறையாக இருநாட்டு ஜனாதிபதிகளும் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அமெரிக்க அரசு முன்னர் உறுதியளித்ததைப்போல் வடகொரியாவின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் எதுவும் இன்னும் விலக்கப்படவில்லை.

இந்நிலையில், அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாவிட்டால் தங்கள் நாட்டின் 'பியாங்ஜின்' (pyongjin) கொள்கைப்படி அணு ஆயுத பலத்தை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு திரும்பப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது. (7)




# உடைந்த பானை


ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன.



கேலி பொருக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்"

அதற்கு விவசாயி, "பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன்,

மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்"

இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது

நீதி : அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் பட்டால், நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது.

## விடுகதைகள்

• தம்பிக்கு எட்டும் அண்ணனுக்கு எட்டாது பெண்ணுக்கு எட்டும் ஆணுக்கு எட்டாது அது என்ன?

உதடுகள்

• ஆணியை எதில் அடித்தால் இறங்கும்?

அதன் தலையில்

• வண்ணான் வெளுக்காத வெள்ளை குயவன் செய்யாத பாண்டம் மழை பெய்யாத தண்ணீர் அது என்ன?

தேங்காய்

• குளிக்காவிட்டால் சிவப்பு குளித்து விட்டால் கறுப்பு அது என்ன?

நெருப்பு

• பச்சை நிறக்கிளி ஒன்று பழுப்பு நிறக்கிளி ஒன்று வெள்ளை நிறக்கொக்கு ஒன்று மூன்றையும் ஒரே கூண்டில் அடைத்து வைத்தேன் எல்லாம் ஒரே நிறமாகி விட்டன அவை என்ன?

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

• அண்டை வீட்டில் குடியிருக்கும் அக்கா தங்கை நாங்கள் பக்கத்தில் இருந்தாலும் தொட்டுக் கொள்ள மாட்டோம் நாங்கள் யார்?

விழிகள்

• தம்படிக் குதிரைக்கு முழு நீள லகான் அது என்ன?

ஊசி, நூல்

• மூன்று தலை, பத்துக் கால்,இரண்டு வால், ஆறு கண், இரண்டு கை, நான்கு கொம்பு அது என்ன?

இரட்டை மாடுகள் பூட்டிய ஏரை உழும் மனிதன்


• ஒரே போத்தலில் இரண்டு தைலங்கள் அது என்ன?

முட்டை

• ஆழக் குழி வெட்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணார்ந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?

தென்னை மரம்

## காக்கையாரே காக்கையாரே எங்கே போனீர்!



பிள்ளை: காக்கையாரே காக்கையாரே
எங்கே போனீர்?
காக்கை: காணாத இடமெல்லாம்
காணப் போனேன்
கண்டு வந்த புதினங்கள்
சொல்லக்கேளும்
செட்டியார் வீட்டிலே கலியாணம்

சிவனார் கோயில் விழாக்கோலம்
மேரி வீட்டிலே கொண்டாட்டம்
மீன் பிடித்துறையிலே சனக்கூட்டம்
கண்டிப் பக்கம் குளிரோ கடுமை
காங்கேசன்துறையில் வெயிலோ கொடுமை

பிள்ளை: அக்கா, அம்மா, அப்பா
அவர்கள் சுகமா?
காக்கை: பொங்கலன்று வருவாராம்
புத்தகம் வாங்கி வருவாராம்
பந்தும் வாங்கி வருவாராம்

பாவை உமக்குத் தருவாராம்
மிகவும் நல்லாய்ப் படியென்று
கடிதம் நேற்றுப் போட்டாராம்
காகா என்று கரையட்டாம்.

மதுரைப் பண்டிதர் க.சச்சிதாநந்தன், ஈழம்

## துணுக்குகள்

• லியானார்டோ டார்வின்சி ஒரு கையில் எழுதிக் கொண்டே மறு கையில் வரையவும் செய்வார்.

• கண்களைத் திறந்து வைத்துத் தும்முவது சாத்தியமில்லை

• விரல்களில் நகங்கள் வளர்வது இயற்கை. அதில் ஆட்காட்டி விரலில் மிக நிதானமாகவும் நடுவிரலில் மிக வேகமாகவும் வளருமாம்.

• நான்கு வயது குழந்தை நாளைக்கு நானூறு கேள்விகள் கேட்கின்றதாம்.

• ஒவ்வொருவரின் கை ரேகையும் தனித்துவமானது. அதே போல தான் நா ரேகையும்

• பன்றிகள் தானாக வானத்தைப் பார்ப்பது சாத்தியமே இல்லை.

• உயர்ந்த ஒலி கவரும் பொருள் இழைக்கண்ணாடி.

• குளிர் காலத்தில் குயில் கூவுவது இல்லை.

• பூமியே ஒரு பெரிய காந்தம் என்று கண்டறிந்தவர் வில்லியம் கில்பர்ட்.

• இரத்தம் உறைவதற்கு உதவும் விற்றமின் கே.

• மண்ணை வளப்படுத்தும் ஒரே தாவரம் எது உழுந்து.

• சூரியக் குடும்பத்தைக் கண்டறிந்தவர், கோபர் நிக்கஸ்.

• பாலில் ஹலாக்டிக் அமிலம்" உள்ளது.

• முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு, இந்தியா.

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் நினைக்க வேண்டாம்.

*- கொன்பூசியஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சமகால அரசியல் சூழலை தமிழினத்துக்கு சாதகமாக்குங்கள்

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பிரதமர் பதவியைப் பறித்தது மட்டுமன்றி அந்தப் பதவியை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கிய ஜனாதிபதி மைத்திரி இப்போது அமைதியாக இருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரியின் மேற்போந்த செயலால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடுங்கோபமுற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவை நம்பி அவரைத் தஞ்சமென்றிருந்த கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மைத்திரியின் அதிரடி நடவடிக்கை ஆத்திரத்தைத் தரும் என்பது உண்மையாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வைத்திருந்த அதே உறவை ஜனாதிபதி மைத்திரியுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேணியிருந்தால், இப்போது அரசியலில் ஏற்பட்டி ருக்கக் கூடிய குழப்பமான சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது தமிழ் அரசியல் தலைமையின் மதியூகமற்ற போக்குகளும் சுயலாப சிந்தனைகளும் தமிழ் இனத்துக்கு ஈனத்தைத் தருவதாகவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்ஙனம் ஜனாதிபதி மைத்திரியை மதிக்காமல் இருந்தாரோ அதே அளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதி மைத்திரியை மதிக்காமல் புறந்தள்ளியது.

இங்குதான் கூட்டமைப்பின் கந்தறுந்த இராஜவியூகம் எல்லாவற்றையும் போட்டுடைத்து நிற்கிறது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிந்த கையோடு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றத்தை அம்பலப்படுத்தி, சனல் 4 தந்த உண்மைத் தகவல்களை ஆதாரப்படுத்தி சர்வதேச விசாரணையை உடன் நடத்துங்கள் என்று கூட்டமைப்பு கோசமிட்டிருந்தால்,

தமிழினத்துக்கு உரிமை கொடுக்காமல் ஏமாற்ற முடியாது என்ற நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற விடயம் அரங்கேறியிருக்கும்.

ஆனால் அதனைச் செய்வதற்குக் கூட்டமைப்பு தயாராகவில்லை.

நல்லாட்சியைக் காப்பாற்றுவதே தங்களின் தலையாய கடமை என்பது போல செயற்பட்ட கூட்டமைப்பு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கும் காலஅவகாசம் கொடுத்தது.

அந்த விடயத்திலாவது அவகாசம் வேண்டாம் உடனடியாக நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள் என்றிருந்தால், தமிழினம் இன்று ஆறுதல் அடைந்திருக்கும்.

இதைவிடுத்து எல்லாம் எனக்குத் தெரியும் என்ற மமதை இன்றைக்கு நிலைமையை எங்கோ கொண்டு சென்றுவிட்டது.

இதுதான் என்றால், தங்கள் எம்பிக்களைக் கூட தங்களுடன் வைத்திருக்கத் திராணியற்ற கூட்டமைப்பினர் இனி என்ன செய்ய போகிறார்கள் என்பதுதான் தமிழ் மக்களிடம் எழுகின்ற வினா.

எதுஎவ்வாறாயினும் இனியும் தமிழினத்தைக் கந்தறுத்து காவடி எடுக்கின்ற கட்டத்துக்கு கொண்டு செல்லாமல் சமகால சூழ்நிலையை தமிழினத்துக்குச் சாதகமாக்கிக் கொள்ள சர்வதேசத்தின் துணைகொண்டு செயற்பட வேண்டும்.

இதை கூட்டமைப்புச் செய்வது, இது காறும் விட்ட மகா தவறுகளுக்குப் பரிகாரம் தேடுவதாக இருக்கும்.

# ரணில் தமிழருக்கு என்ன நன்மை செய்தார்? என்பதற்காக கூட்டமைப்பு அவரை ஆதரிக்கவுள்ளது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களுக்கு எந்தவொரு நன்மைகளையும் பெற்றுக் கொடுக்காத. இதுவரை தமிழ்த் தேசிய அரசியல் நிராகரித்து வந்த ஒரு போலி அரசியல மைப்புக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதென்ற முடிவுக்கு வந்திருக்கின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்ப நிலைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடம் கடந்த 02ஆம் திகதி கூடி ஆராய்ந்த பின்னர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்கள்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அடுத்த பாராளுமன்ற அமர்வில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தங்கள் வாக்குகளைச் செலுத்தவுள்ளதாக அறிவித்திருக்கின்றார்கள். இரண்டு பிரதான காரணங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கின்றது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்குப் பின்னர் பிரதமரை நீக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையென்ற விடயமும் பாராளுமன்ற அமர்வுகளை நிறுத்தி ஒத்திவைத்தமை ஜனநாயகத்துக்கு விரோதமான செயலெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. இந்த இரண்டு விடயங்களுக்காகவும் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்திருக்கும் முடிவுக்கெதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தங்களுடைய வாக்குகளைப் பயன்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி ஆரம்பமான போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முகங்களைப் பார்க்காமல் கொள்கைகளைப் பார்த்துத்தான் முடிவெடுப்போம் எனக் கூறியிருந்தார். ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துதல் மற்றும் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல் ஆகிய விடயங்களுக்கு வாக்குறுதிகள் வழங்கும் தரப்பினருக்கு மாத்திரமே தமது ஆதரவு வழங்கப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அவர் தெரிவிக்கும்போது அரசியலமைப்பை மீறிய விடயம் சம்பந்தனுக்குத் தெரிந்திருக்கவில்லையே.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் தமிழ்மக்களுக்கு நன்மைகள் எதுவுமில்லாத நிலையில் வரவிருக்கின்ற அரசியலமைப்பும் ஒரு ஒற்றையாட்சி அரசியலமைப்பாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலும் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமென கூட்டமைப்பு நிபந்தனை விதித்தது. ஆனால், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறான எந்த விடயங்களும் குறிப்பிடப்படவில்லை. தற்போதைய பேருக்காகவேனும் எந்தவொரு விடயங்களையும் தமிழருக்கு வழங்குவது தொடர்பாக வெளிக்காட்ட முடியாத நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதைய நிலையில் எந்தவொரு நிபந்தனைகளையும் விதிக்க முடியாத நிலையிலிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய மேற்கு நாடுகளின் கைக்கூலிகள். மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை சீனாவின் பின்னணியில் நடந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எஜமானர்கள் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு நீங்கள் நிபந்தனையில்லாத ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்க வேண்டுமெனத் தெரியப்படுத்தியிருக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு இதுவரை எவ்வித நன்மைகளையும் செய்யவில்லை, இனியும் செய்யப் போவதில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கடந்த மூன்றரை வருட காலமாகத் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை செய்தார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது.

ஒரு தரப்பை ஆதரிக்க முடியாது என்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் போது வாக்கெடுப்பின்போது நடுநிலைமை வகிக்கலாம் அல்லது மற்றைய தரப்பை ஆதரிக்கலாம் ஆகிய இரண்டு தெரிவுகள் காணப்படுகின்றன. நாம் ஒரு தரப்பை ஆதரிக்க முன்னர் அந்தத் தரப்புத் தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்றார் கஜேந்திரகுமார். (மு-9)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளத் தயார் – *பீரிஸ்*

ஐக்கிய தேசியக் கட்சியினரால் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளத் தயார் என தெரிவித்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எதிர்த்தரப்பினரின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் பலம் தற்போது எம்மிடம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சபாநாயகருக்கு தன் அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தை ஒருபோதும் கூட்ட முடியாது எனவும் மேற்குலக நாடுகளின் தேவைகளுக்காக புதிய அரசியலமைப்பு ஒருபோதும் உருவாகாது. அவ்வாறு புதிய அரசியலமைப்பு உருவாக வேண்டுமாயின் அது நாட்டை பிளவுபடுத்தாத அரசியலமைப்பாக மாத்திரமே உருவாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (மு)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும்ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில வங்காலை ஆகிய பிரதேசங்களிலும், மின்தடைப்படும். (இ-9)


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்"

*–அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்து கவிஞர்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குடும்ப நல வாழ்த்து



ஒவ்வொரு நாளும் காலையில் இருந்து மாலை வரையில் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை இருபத்தைந்து தடவை வாழ்த்தினால் ஒரு மாதத்திலேயே குடும்பத்தில் நல்லபடியான சூழ்நிலை உருவாவதைக் காணலாம்.

வாழ்த்தும் போது தெய்வீக நிலையில். அமைதி நிலையில் இருந்து கொண்டு வாழ்த்த வேண்டும். இந்த முறையில் வாழ்த்தின் மூலம் உலகத்தையே மாற்றி அமைத்து விடலாம். நமக்குத் தீமை செய்தவரையும் ஏன் வாழ்த்த வேண்டும் என்றால், "அவர் அறியாமையினாலே தான் அவ்வாறு செய்தார். நம்முடைய கர்மச் சுமையின் விளைவு அவரைத் தீமை செய்ய இயக்கியது. எனவே அவர் செய்தார். அவருக்கு உள்ளாக இயங்கிக் கொண்டிருப்பதும் எல்லாம்வல்ல முழுமுதற் பொருளே.

எனவே. அவரை மனதார வாழ்த்தி எனது தீய பதிவு ஒன்றை அகற்ற உதவிய அவருக்கு நன்றியும் செலுத்துவேன்" என்ற தத்துவ விளக்கம் நம் செயலுக்கு வந்து இயல்பாகி விட்டதென்றால். நாம் ஆன்மீகப் பாதையில் திடமாக முன்னேறிச் செல்கிறோம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

# சிவப்புக் கோட்டு எல்லையில் வைத்து நிகழ்த்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு

## இந்தியாவா? சீனாவா?

## தடுமாறும் இலங்கை



அரசியல் கொந்தளிப்பின் மத்தியில் மீண்டும் மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றி விட்டார் என்றவுடன், முதலில் வாழ்த்து தெரிவித்த தலைவராக, சீன தலைவர் ஷி ஜின்பிங் இடம் பிடித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமராக பதவி வகித்து வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பதவிநீக்கம் செய்யப்பட்டு புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்ப்டிருந்தர் இதனை தொடர்ந்து இலங்கை அரசியலில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டிருக்கிறது

அரசமரம் போல் இருக்க வேண்டும் என்பதற்காக, யாப்புகளாலும் அரசியல் திருத்த சட்டங்கள் என்ற விழுதுகளாலும், பௌத்த சிங்களத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியல் இயந்திரம், இன்று பிளந்து போய் கிடக்கிறது. மகிந்த, ரணில், இருதரப்புக்கள் தலைமைத்துவ அதிகாரம் தமது கைகளிலேயே உள்ளது என்று உரிமை கோரி வருகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்று வரும் அரசியல் கொந்தளிப்பு சர்வதேச ஊடகங்களில் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக சீன -இந்திய பத்திரிகைகள் தமது முக்கிய கவனத்தை கொண்டுள்ளன. இந்த நிலையில் சர்வதேச நிலையிலிருந்து ஒரு பார்வை இங்கே வைக்கப்படுகிறது.

பிராந்திய வல்லரசுகளின் கைகள் ஓங்கி இருக்கும் காலம் இது. ஆசியாவில் அரசியல் முன்னுரிமை பெறும் பொருட்டு மூன்று பிரதான வல்லரசுகள் போட்டியிடுகின்றன. நான்காவதாக ரஷ்யாவும் தனது கிழக்கு கரை குறித்த அதிக கரிசனை கொண்டுள்ளது.

ஜப்பானிய -இந்திய அரசுகள் வடக்கு அத்திலாந்திக்கரை தேசங்களின் தாராள ஜனநாயகத்தின் பேரால் ஒன்றுடன் ஒன்று ஒத்து செயற்படுகின்றன. கீழைத்தேய வர்த்தக கம்யூனிசகொள்கை கொண்ட சீனாவை, தமது கூட்டு நடவடிக்கைகள் மூலம் கொள்ளடக்கும் தன்மையை தமது மூலோபாயமாக கொண்டிருக்கின்றன.

இலங்கை போன்ற சிறிய நாடுகள் வல்லரசுகளின் போட்டியின் மத்தியில் தமது நலன்களை முன்னிறுத்திக் கொள்ளும் கொள்கைகளை தம்மகத்தே கொண்டிருக்கின்றன. இலங்கையின் இரு பிரதான கட்சிகளான் ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் நாட்டின் வெளியுறவு கொள்கையை பொறுத்தவரையில் தமது சார்புதன்மையை வெளிப்படையாக காட்டி கொள்ளாத ஒரு போக்கை கொண்டிருக்கின்றன.

இருந்த போதிலும் மௌனக் கொள்கை மற்றும் செயல் அளவில் ஐக்கிய தேசிய கட்சி வடக்கு அத்திலாந்திக்கரை தேசங்களின் சார்புத்தன்மையை அதிகம் கொண்டிருந்தது.

அதேவேளை சுதந்திர கட்சி அதிகம் சீன சார்புத்தன்மையை ஒத்த உள்நாட்டு கொள்கையை, தனது மௌனமான வெளியுறவு விவகாரங்களில் சீன சார்பு விவகாரங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாகவும் இருந்து வருகின்றது.

இருந்த போதிலும் தமது நடைமுறை ஆட்சி நலன்களின் அடிப்படையில் இவ்விரு கட்சிகளும் இலங்கை சார்பாக, எந்த வல்லரசுகளுடனும் பேரம் பேசும் சக்திகளாக இருந்து வருகின்றன.

அணிசேரா அமைப்பு காலாவதியாகி விட்ட போதிலும், தாம் அணிசேரா தன்மையை சர்வதேச உறவு கொள்கையில் கடைப்பிடித்து வரவேண்டும் என்றே கொழும்பு பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் விதைந்துரைத்தும் வந்திருக்கின்றன.

பிராந்திய வல்லரசு நாடுகளைப் பொறுத்தவரையில் அவை தமது நலன்களை மையமாக கொண்டு எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் அக்கட்சியின் செல்வாக்கை தம் வசம் வைத்திருக்கும் முயற்சியிலேயே இருந்து வந்திருக்கின்றன.


இலங்கையின் அயல் தீவான மாலைதீவில் அண்மையில் இடம் பெற்ற அரசியல் கொந்தளிப்பின் பின்னர், ஜனாதிபதி யமீன் பதவியிலிருந்து இறங்க வேண்டிய நிலை உருவானது. யமீன் சீன சார்பாளராகவும் பெருமளவிலான இந்திய எதிர்ப்பாளராகவும் இருந்து வந்திருந்தார்.

இதனால் இந்திய மேலைத்தேய நாடுகளின் நேரடி அழுத்தத்திற்கு உள்ளாக வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. மாலைதீவு இந்து சமுத்திரப் பிராந்திய தீவு என்பதன் பலனாக இந்தியா மிகவும் அதீத கவனம் செலுத்தி வருகிறது.

இதனால் மாலைதீவில் சீனா தோல்வி காண வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், இந்தியாவின் புறநிலங்களில் ஒன்று போன்ற வகையில், இலங்கை மிக அருகாமையில் அமைந்துள்ள ஒரு இறையாண்மை மிக்க தீவு ஆகும். மேலும் இலங்கையின் ஆட்சித் தலைவர்களின் குணாதிசயங்களின் பிரகாரம் எந்த நாட்டுடனும் தமது எதிர்ப்பை அரசியலில் காட்டிக் கொள்ளாத போக்கை கொண்டிருந்தனர்.

ஆனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு டில்லி புரிந்துணர்வு கொள்கையா (New Delhi consensus) அல்லது பீஜிங் புரிந்துணர்வு கொள்கையா (Beijing consensus) என இரண்டில் ஒன்று என்ற நிலையை நோக்கி இலங்கையைக் கொண்டு செல்லும் பாணியில் அமைந்திருக்கிறது.

**South China Morning Post** பத்திரிகை தனது ஒவ்வொரு கட்டுரைகளிலும் இலங்கைக்கு சீனா செய்த உதவிகள் யாவற்றையும் திரும்பத் திரும்ப எடுத்து கூறி வருகிறது.



2009 ஆம் ஆண்டு யுத்தத்தின்பின்பு நாட்டை கட்டி எழுப்பி பில்லியன் கணக்கான பணத்தை சீனா வழங்கி உள்ளது. கொழும்பு துறைமுக நகர கட்டுமானத்திற்கு சீனா 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களைசெலவு செய்துள்ளது .

இவ்வருடம் ஜுலை மாதத்தில் கூட சீன தலைவர் ஷி ஜின்பிங் 287 மில்லியன் டொலர்களை உதவித்தெகையாக கொடுத்துள்ளார் என பல்வேறு வகையில் இலங்கை, சீனாவுக்கு கடமைப்பாடு உடையது என்ற வகையில் அழுத்தமாக கட்டுரைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்தியப் பத்திரிகைகளை பொறுத்தவரை அரசியல் சட்ட விதிமுறைகள் குறித்த பேச்சு அதிகம் உள்ளது. நாட்டின் அரசியல் சட்டங்களுக்கு மதிப்பளிக்காது போய்விடும் நிலை ஏற்பட்டால் மேலைத்தேய போக்கு வலுவிழந்த நிலை ஏற்பட்டு விடும் என்பதுடன் இலங்கை தமது செல்வாக்கிலிருந்து தூர விலகி சென்று விடும் என்பது இந்திய பார்வையாக உள்ளது.

சீன- இந்திய இராஜதந்திரிகள் நாம் உள்நாட்டு அரசியலில் தலையிடமாட்டோம் ஆனால் உன்னிப்பாக கவனிப்போம் என்று வாக்குறுதி கூறி உள்ளனர். இது இருபகுதியும் இந்த தீவின் மீது தாம் காட்டும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

தம்மால் கட்டி அமைக்கப் பட்டுள்ள கடல்சார் பாதுகாப்பு குறித்த மூலோபாய பிடியை இருதரப்பும் முக்கியமாக கருதுகின்றன. இந்த ஆட்சி மாற்றத்தில் போட்டி போடும் அரசியல் தலைவர்கள் யாராவது தமது நலன் எல்லைகளின் சிவப்புக் கோட்டை தாண்டுகின்றார்களா என்பது தான் இவர்களது பார்வை.

அதேவேளை இந்த ஆட்சி கவிழ்ப்பு நிகழ்வு கூட, அந்த சிவப்புக் கோட்டின் எல்லையில் வைத்து தான் நிகழ்ந்திருக்கிறது என்பது இங்கே முக்கிய மானதாகும். 300 மில்லியன் அமெரிக்க டொலர் வீட்டுத்திட்டம் சீன கைகளில் இருந்து இந்திய கைகளுக்கு மாற்றம் பெற்றது.

அம்பாந்தோட்டையிலே சீன கப்பற்தளத்திற்கு அருகே இந்திய செல்வாக்கிற்கு அதிகம் இடம்கொடுக்கப்பட்டது. திருகோணமலை துறைமுகம் ஜப்பானிய இந்திய நாட்டங்களுக்கு உள்ளானது போன்றன சீன வலுவிழப்பு நடவடிக்கைகளாக சீனதரப்பால் பார்க்கப் பட்டது. இந்த நிலையே அரசியல் சட்ட வரைமுறைகளுக்கு அப் பால் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை கைப்பற்றும் நிலையை ஏற்படுத்தியது. ஆக பிராந்திய மற்றும்பூகோள வல்லரசுகளின் நலன்களின் முன்னால் எந்த சிறிய நாட்டு அரசியல் சட்டங்களும் யாப்புகளும் வெறும் குப்பை கூழங்களே.

லோகன் பரமசாமி.

## நவம்பர் 14-ம்...

விட்டு அந்தப் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி கடந்த 26-ம் திகதி நியமித்தார். இந்த நியமனம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும் அதனை சீர்செய்வதற்கு உடனடியாக நாடாளுமன்றைக் கூட்டுமாறு ரணில் விக்கிரமசிங்கவும் மறுநாள் 27-ம் திகதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் ஒக்டோபர் 27-ம் திகதி தொடக்கம் நவம்பர் 16-ம் திகதிவரை ஜனாதிபதியின் உத்தரவில் நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. அதன் ஊடாக நாடாளுமன்றின் இரண்டாது கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு தலைநகர் கொழும்பில் பல்வேறு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜேவிபி ஆகியனவும் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டுமாறு வலியுறுத்தின.

மேலும் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி நாட்டின் அரசியல் குழப்ப நிலையை முடிவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தின. ஐ.நா. பொதுச் செயலாளரும் அதனையே வலியுறுத்தினார்.

எனினும் எல்லாவற்றையும் புறம்தள்ளிவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னர் அறிவித்த திகதியிலிருந்து இரண்டு நாள்கள் முன்னதாக நாடாளுமன்றை ஆரம்பிப்பதாக உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளார். (மு)

## கொழும்பில்...

களின் ஆதரவாளர்களும் இதன்போது ஒன்றுகூடவுள்ளனர். ஐந்தாயிரம் பஸ்களில் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஆதரவாளர்கள் அழைத்து வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்துடன் இணைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக்கட்சி என்பவற்றின் ஆதரவாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (மு)

## எதிர்கால தலை...

அதில் கலந்துகொண்டிருந்த கலாநிதி ஜெஹான் பெரேரா, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது மேற்குறித்தவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சமாதான செயற்பாட்டாளராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக நல்லிணக்க செயற்பாடுகள் கடந்த மூன்று வருடகாலமாக முன்னோக்கிக் கொண்டுசெல்லப்பட்டன. எமது நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நல்லிணக்க செயற்பாடுகள் நல்லாட்சி அரசாங்கத்திலேயே முன்னெடுக்கப்பட்டன. நல்லாட்சி அரசாங்கத்தின் தலைமைத்துவமே இதனை முன்னெடுத்துச் சென்றது. அதற்கு காரணம் ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அவருடைய எண்ணக்கருவின் பிரகாரம் பல விடயங்கள் முன்னேற்றம் கண்டன. குறிப்பாக காணிகள் மீள ஒப்படைக்கப்பட்டன. காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. இழப்பீட்டு அலுவலகம் அமைக்கப்பட்டது. வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. தற்போது நாம் அனுபவிக்கும் சுதந்திரம் என சகல விடயங்களும் நல்லாட்சி அரசாங்கத்திலேயே முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், அவரது இடத்திற்கு இன்னொருவரை நியமிக்க நாம் விரும்பவில்லை. குறிப்பாக கடந்த 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் நாம் பயத்துடன் வாழ்ந்த வாழ்க்கைக்கு மீண்டும் செல்ல விரும்பவில்லை. அதற்காகத்தான் இன்று நான் இங்குள்ளேன்.

அடுத்ததாக, அதிகாரம் கைமாறிய விடயம் மிகவும் மோசமானது. மக்களுக்கு தெரியாமல், இரவோடிரவாக, இரகசியமாக அதிகாரம் கைமாற்றப்பட்டது. அதனால்தான் இச்செயற்பாட்டை அரசியல் சதியென கூறுகிறோம். இந்த தடவை இரத்தமின்றி, வன்முறையின்றி இந்த சதி இடம்பெற்றது. அடுத்த தடவை இவ்வாறு இடம்பெறாது. ஆகவே எதிர்கால தலைமைத்துவம் பயங்கரமானதாக இருக்கும். ஆகவே, இந்நிலைமை இப்போதே நிறுத்தப்பட வேண்டும்.

அடுத்ததாக, அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள் மக்களுக்கு தெரியாது. அவை குறித்த தெளிவுபடுத்தல்களை அரசாங்கம் உரிய முறையில் முன்னெடுக்கவில்லை. தகவல் அறியும் உரிமை, மனித உரிமை ஆணையகம், காணாமல்போனோர் அலுவலகம் தொடர்பான அறிவு மக்களுக்கு இல்லை. ஆகவே நாங்கள் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். அவற்றிற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது.

இதேவேளை, வர்த்தக செயற்பாடுகள் பின்னடைவை கண்டுள்ளன. அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் மக்கள் தமது பணத்தை செலவிட தயங்குகின்றனர். எதிர்காலத்தை பற்றிய அச்சத்தினால் பணத்தை சேமிக்க முற்படுகின்றனர். இதனால் பொருளாதாரம், மக்களின் வாழ்க்கைத்தரம் என்பன பாதிக்கப்படுகின்றன. இவற்றிற்காகவே இன்று நாம் போராடுகின்றோம் என்றார்.(மு)

## எழுத்துமூல...

தான் மீண்டும் தொடர்பு கொள்வதாகச் சொன்னார். ஆனால் தொடர்பு கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசுக்கு ஆதரவாக நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதனை எதிர்க்கப்போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது. அந்த முடிவு எடுக்கப்பட்டதன் பின்னணி, ராஜபக்ஷவை ஆதரிக்க முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஆகியவை குறித்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தவை வருமாறு,

கே: மகிந்த அரசுக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிக்கப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவின் பின்னணி என்ன?

ப: பிரதமரை நீக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை. முதலில் இருந்தது. 19வது திருத்தச் சட்டத்திற்குப் பிறகு அந்த அதிகாரமில்லை. பிரதமராக இருந்தவரை ஜனாதிபதி இப்படி நீக்கியது தவறு. பிரதமர் முறையாக நீக்கப்பட்டால்தான், வெற்றிடம் ஏற்பட்டு புதிய பிரதமரை நியமிக்கலாம். வெற்றிடம் ஏற்படாமல் புதிய பிரதமரை நியமித்திருக்கிறார். பாராளுமன்றத்தை ஒத்திவைத்திருக்கிறார். இடைக்காலத்தில் பலவிதமான கெடுபிடிகள் நிலவுவதை நாங்கள் அறிகிறோம். பிரதமராக பதவியேற்பவர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை பெற வேண்டியது அவசியம்.

ஆகவே இதனை நாங்கள் கவனமாக பரிசீலித்து, இந்த செயல்பாடுகளை நாங்கள் ஏற்க முடியாது என்று முடிவெடுத்தோம். பிரதமரை நீக்கியது தவறு. புதிய பிரதமரை நியமித்தது தவறு என்பதை வைத்து, மகிந்த அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தால், மேலே சொன்ன அடிப்படையில் செயல்படலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

கே: ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமரை நீக்கிய பிறகு, நீங்கள் அவரை சந்தித்துப் பேசினீர்கள். என்ன பேசினீர்கள்?

ப: அந்த சந்திப்பின்போது அரசியல் தீர்வு உட்பட பல விஷயங்களைப் பற்றிப் பேசினேன். இதைப் பற்றியும் பேசினேன். எங்கள் கருத்தைத் தெரிவித்தோம். அவ்வளவுதான்.

கே: இதற்குப் பிறகு மகிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினீர்கள். அப்போது அவர் உங்களுடைய ஆதரவைக் கோரியதாகத் தெரிகிறது.

ப: ஆம். அவர் எங்களுடைய ஆதரவைக் கோரினார். ஆதரவைத் தருவது கடினமாக இருக்கும் என்று சொன்னேன். நடந்தது தவறு என்பது எங்களுடைய கருத்து. இருந்தபோதும் அரசியல் தீர்வு தொடர்பாக உங்கள் நிலைப்பாட்டை நீங்கள் முன்வைப்பதாக இருந்தால், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி நாங்கள் ஒரு முடிவுக்கு வரலாம் என்று சொன்னேன்.

அரசியல் தீர்வு தொடர்பாக ஒரு தீர்மானத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் எவ்விதம் நடைமுறைப்படுத்துவீர்கள் எந்த கால வரம்புக்குள் செயல்படுத்துவீர்கள் என்பதை எழுத்துமூலமாகத் தந்தால் ஆதரவு தருவது குறித்து பரிசீலிப்போம் எனக் கூறினேன். தான் மீண்டும் தொடர்பு கொள்வதாகச் சொன்னார். ஆனால் தொடர்பு கொள்ளவில்லை.

கே: அரசியல் தீர்வு என்றால், நீங்கள் என்ன கேட்டீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

ப: நம்பிக்கையுடைய உறுதியான அதிகாரப் பகிர்வு, பிராந்தியங்களின் அடிப்படையில் அளிக்கப்படும் இந்த அதிகாரப் பகிர்வு மீளப் பெற முடியாததாக இருக்க வேண்டும். ஒரு பிராந்தியமோ, மாகாணமோ அந்த அதிகாரத்தை தன்னிச்சையாக பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

மத்திய அரசு அதில் தலையிடக்கூடிய நிலை இருக்கக்கூடாது. மக்களின் நாளாந்த தேவைகளை, மக்கள் தேர்வு செய்யும் பிரதிநிதிகளின் ஊடாக, ஒரு பிராந்திய அமைச்சரவையின் ஊடாக, பிராந்திய சபையின் ஊடாக வழிவகுக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் தீர்வுத்திட்டம்.

கே: சமீபத்தில் ஜனாதிபதி பேசும்போது, வடக்கு - கிழக்கு இணைக்கப்படமாட்டாது. ஃபெடரல் ஆட்சி முறை இனி சாத்தியமில்லையென்றெல்லாம் கூறியிருக்கிறார்.

ப: இது ஏற்புடையதல்ல. இது பேசித் தீர்க்க வேண்டிய விஷயம். அவர் சொன்னதை ஏற்கவில்லை. பார்க்கலாம்.

கே: ஐக்கிய தேசியக் கட்சி உங்களிடம் ஆதரவைக் கோரியபோது, மகிந்தவிடம் கேட்டதுபோல அவர்களிடம் வாக்குறுதி ஏதேனும் கேட்டீர்களா?

ப: ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, பாராளுமன்றத்தில் தற்போது ஒரு நடைமுறை நடைபெற்று வருகிறது. புதிய அரசியல் சாசனத்தை உருவாக்க, நாடாளுமன்றம் ஒரு அரசியல் சாசன சபையாக மாற்றப்பட்டு அதை விவாதித்துவந்தது. நடவடிக்கை குழு, உப குழுக்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆகவே இது தொடர்பாக பல விஷயங்கள் நடைபெற்று வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி அரசைப் பொறுத்தவரையில் ஒரு காரியம் நடந்து வருகிறது. அதைப்பற்றி எங்களுக்குத் தெரியும் என்பதால், புதிதாக எதையும் பேச வேண்டிய தேவை ஏற்படவில்லை என்றார் சம்பந்தன். (மு)

## மைத்திரியின்...

குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில், அதாவது தமிழ் மக்களது வாக்குப் பலத்தில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது கூட்டமைப்பைக் கூறுபோட நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இது அவரது அரசியல் வாழ்வின் அழிவின் ஆரம்பமாகும். இதனை நாம் பகிரங்கமாகவே அறிவிக்கின்றோம். எமது உப்பினைத் தின்று எமது கட்சியில் இருந்து ஒருவரைத் திருடி அவரை அமைச்சராக ஜனாதிபதி நியமித்திருக்கின்றார்.

இவ்வாறான மோசமான செயலைச் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஒருபோதுமே எமது ஆதரவு இருக்காது. எமது மக்களைக் கூறுபோடுவதற்காக மைத்திரிபால சிறிசேனவை நாம் ஜனாதிபதி ஆக்கவில்லை.

தேர்தலில் தோற்றிருந்தால் ஆறடி நிலத்திற்குள் போயிருப்பேன் எனக்கூறிய சிறிசேனவைக் காப்பாற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லவா?

இன்று எங்களையே பிரித்துப்போடும் சூழ்ச்சி செய்யும் கபட நாடகமாடும் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன மாறியிருக்கின்றார். அது அவரது அழிவிற்கான ஆரம்பம் என அவர் மிகவும் ஆவேசமாகக் ஒருமையில் குறிப்பிட்டிருந்தார். (மு-281)

## கூட்டமைப்பு...

கையில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

எனவே தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டிலேயே கூட்டமைப்பு ஈடுபடுகின்றது. இவர்களுடன் இணைந்திருந்தால் மக்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது.

முடிந்தால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் எவருக்கும் ஆதரவு வழங்காமல் நடுநிலைமை வகிக்கட்டும். நானும் பதவியை விட்டு நடுநிலைமை வகிக்கின்றேன்.

எனக்கு நிச்சயமாகத் தெரியும் இவ்வளவு காலமும் எதையுமே சாதிக்காத கூட்டமைப்பு இனிமேலும் எதையும் செய்யப்போவதில்லை. அதுவும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கண்டிப்பாக செய்யப்போவதில்லை.

எனவே இவர்களுடன் இருந்து எமது காலத்தை வீணடிப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.எவ்வளவு குறுகிய காலமாக இருந்தாலும் எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என அவர் மேலும் குறிப்பீட்டுள்ளார். (மு)

## ஐ.தே.கட்சியின்...

வைத்தார். இதன்மூலம் நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க மகிந்த தரப்புக்கு இன்னும் 8 உறுப்பினர்களே தேவை.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் உள்பட பிரதமர் மகிந்த ஆதரவு தரப்புக்கு 105 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளடங்கலாக 113 நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.(மு)

## நாடாளுமன்...

எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளதால் ஜப்பானும் அமெரிக்காவும் பல மில்லியன் டொலர்கள் அபிவிருத்தி நிதியை இடைநிறுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு குறித்து சர்வதேச சமூகத்தின் மத்தியில் கரிசனைகள் காணப்படுகின்றன.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து உலக நாடுகள் மிகவும் உணர்வுபூர்வமான நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் காணி நிர்வாகத்தில் முன்னேற்றம் காணும் நடவடிக்கைகளிற்காக 500 மில்லியன் டொலர்களை வழங்கயிருந்த அமெரிக்கா அதனை தற்போது இடைநிறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி எனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் போராட்டங்களை எனது கட்சி விரிவாக்கியுள்ளது. நாங்கள் மாற்று வழிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம், பொதுமக்களை பெருமளவில் அணி திரட்டவுள்ளோம் என்றார் அவர். (மு)


தன நிதானய
திகதி 2018-11-04
சீட்டிழுப்பு இலக்கம் 71
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 23 34 50 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/11/04
சீட்டிழுப்பு இலக்கம் 3782
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 2 0 7 7 8
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 1933
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 14 23 47
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/11/04
சீட்டிழுப்பு இலக்கம் 468
லக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 38 52 60 69 53
தேசிய லொத்தர் சபை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-4295)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-4077)

## வடக்கில் உள்ள...

த்தை கொண்டாடும் வகையில் இந்த விடுமுறையை வழங்குமாறும் எதிர்வரும் சனிக்கிழமை பதில் பாடசாலை நடத்தி அந்த விடுமுறைக்கான தினத்தினை சரி செய்து கொள்ளுமாறும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வடமாகாண ஆளுநர் அறிவித்துள்ளார். (மு-9-60)

## அமைச்சு பதவி...

ணைப்பு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சராக- வாசுதேவ நாணயக்கார.

பெருநகரங்கள் மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக - தினேஷ் குணவர்தன.

ஊடகத் துறை டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக - கெஹலிய ரம்புக்வெல்ல.

கலாசார, உள்நாட்டலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி பிரதியமைச்சராக - ஆர்.டி.அசோக பிரியந்த ஆகியோர் பதவியேற்றனர். (மு)

மஞ்சவனப்பதி முருகன் துணை
வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்
தீபாவளியை முன்னிட்டு இன்றும் மா, சீனி, அங்கர் போன்றவை தவிர்ந்த ஏனைய பொருட்களை 3000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவும் 5000/-க்கு மேல் கொள்வனவு செய் தால் 6 Km சுற்றளவில் உள்ளவர்களுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் 10% கழிவுடன் இலவசமாக வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.
குறிப்பு:- தொலைபேசி மூலமும் ஓடர் செய்யலாம்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட அசல் தோல் (Genuine leather) சப்பாத்து, belt, பேர்ஸ், பெண்களுக்கான பாதணிகள் ஆகியனவும் 10% கழிவுடன் விற்பனை செய்யப்படும்.
சண்ஜெஸ் A-Z சுப்பர் மார்ட்
sunjeys A-Z Super Mart
இல.100, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்)
T.P- 021 205 3077, 077 747 4111
(C-4314)

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
இன்னும் 3 நாட்கள் மட்டுமே உள்ளன
2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்)
தொ.பே இல.: 077 755 4528
(6121)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான.கட்டணம்
UK - 550/=, France - 700/= Germany - 650/= Swiss - 750/= Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)
3-5 Working Days

பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு
Share Market Workshop அடிப்படை முதலீட்டு உத்திகள்
CSE COLOMBO STOCK EXCHANGE
நவம்பர் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி - மாலை 4.00 மணிவரை
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ் - கிளையில்.
தொடர்புகளுக்கு: 021 222 1455 / 077 782 2014
பதிவுக்கட்டணம் ரூபாய்: 1000/=
(சி-4306)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சி-4294)

# 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

## மனிதநேயன், வைத்தியகலாநிதி அமரர்
## கனகசுந்தரம் மயிலேறும்பெருமாள்



கடந்த 07.10.2018 (ஞாயிற்றுக்கிழமை) சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் Dr.கனகசுந்தரம் மயிலேறும்பெருமாள் அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 06.11.2018 (செவ்வாய்க்கிழமை) காலை 6.30 மணியளவில் ஊறணி அந்தியேட்டிமடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுசெய்து இவ்அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தோற்றம்: 23.05.1941
மறைவு: 07.10.2018

இல.14, "தெய்வஸ்தான்"
பிரதான வீதி, பருத்தித்துறை.

இங்ஙனம்: குடும்பத்தினர்
தொ.பே: 077 315 1654

(சி-4307)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.